விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 01 ஞாயிற்றுக்கிழமை (18.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 303




## ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை இழக்கும் வாய்ப்பு

## இலங்கையில் மனித உரிமைகள் திருப்தியானதாக அமையவில்லை

### ★ ஐரோப்பிய ஒன்றியம் குற்றச்சாட்டு ★

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் திருப்தியளிக்கும் வகையில் அமையவில்லை என ஐரோப்பிய ஒன்றியம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாக இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தை வழங்குவதற்கான சாத்தியங்கள் வெகு குறைவாகவே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச மனித உரிமை சட்ட திட்டங்களுக்கு அமைவான வகையில் இலங்கை செயற்படவில்லை என்பது விசாரணைகளின் மூலம் புலனாகியுள்ளது என ஐரோப்பிய ஒன்றியப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நூறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஜி.எஸ்.பி. வரிச் சலுகைத் திட்டத்தை இலங்கை இழக்க நேரிடும். கடந்த 25 ஆண்டு காலமாக நீடித்து வந்த யுத்த காலத்தில் இலங்கையில் இடம் (14 ஆம் பக்கம் பார்க்க)

## லங்கா வார ஏட்டின் ஆசிரியர் நேற்றுக் கைது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள வார ஏடான லங்கா வார ஏட்டின் ஆசிரியர் சந்தான சிறிமல்வத்த பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளையில் இப் பத்திரிகையின் நிருபர் ஒருவரை பொலிஸார் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நேற்று மாலை லங்கா ஆசிரியர் சந்தான சிறிமல்வத்த குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாகப் (14 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் பொதுத் தேர்தலை நடத்த முடிவு

## இதுவே ஆளும் கூட்டணிக்கு விருப்பம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி மட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கொழும்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (14 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம்

### கோப்பாய் நலன்புரி முகாமுக்கும் சென்றார்

(யாழ்ப்பாணம்)

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் கியோ நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

விமானப் படையின் விசேட ஹெலியில் யாழ்.கோட்டைப் பகுதியில் வந்திறங்கிய சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழு (14 ஆம் பக்கம் பார்க்க)



## பொதுக் கூட்டமைப்பை உருவாக்க த.தே. கூட்டமைப்பு முயற்சி

(கொழும்பு)

பொதுவான ஓர் அரசியல் கூட்டமைப்பை உருவாக்குவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுபான்மைக் கட்சிகளுக்குகிடையில் பொதுவான ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

சிறுபான்மைக் கட்சிகளுக்கிடையில் தற்போது சிறந்த புரிந்துணர்வு காணப்படுகின்றது. எனினும் சிறுபான்மைக் கட்சிகளுக்கிடையில் பொதுவான கூட்டமைப்பொன்றை அமைப்பது குறித்து (14 ஆம் பக்கம் பார்க்க)

## மழைக்கு முன் முகாம்களிலுள்ள மக்களை சொந்த இடங்களில் குடியமர்த்துங்கள்

### அமைச்சர் டக்ளஸ் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மக்களைப் பருவ மழைக்கு முன்னர் சொந்த இடங்களில் குடியமர்த்துமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு விடுத்துள்ள கோரிக்கையில் பருவ மழை அண்மித்துள்ளதால் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் இட நெருக்கடி காரணமாக பெரும் பாதிப்புக்குள்ளாவார்கள்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 40 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் தற்போது வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இம் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் உடனடி (14 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்

தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus
MORE BRANDS-MORE CHOICE
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

(C-3343)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு வடமாகாணத்தில் 13 பேர் தெரிவாகினர்

(திருகோணமலை)

வடக்கு மாகாணத்தில் இலங்கை அதிபர் சேவை தரம்-1 இலிருந்து கல்வி நிர்வாக சேவை வகுப்பு 3இற்கு 13 பேர் பதவியுயர்வு பெற்றுள்ளனர் என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் இலங்கை அதிபர் சேவை தரம்1 இலிருந்து கல்வி நிர்வாக சேவை வகுப்பு 3 இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

வீ.கணேசராசா (யாழ்.இந்துக் கல்லூரி), திருமதி எஸ்.ஆனந்தி(மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), எஸ்.சின்னராசா ( கிளிநொச்சி), திருமதி எஸ்.மாணிக்கவாசகர் (வவுனியா தெற்கு கல்வி வலயம்),எ.உலகநாதன்(வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்), திருமதி ஆன்ட்மேரி (மன்னார் வலயக் கல்வி அலுவலகம்),எம்.எஸ்.ரவல் (மன்னார் வலயக் கல்வி அலுவலகம்),

எஸ்.கைலாயநாதன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), பி.முத்துலிங்கம் (கந்தர்மடம்), கே.மாணிக்கம் (யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), எஸ்.குபேரநாதன் (உடுவில் கோட்டக் கல்வி அதிகாரி), திருமதி ஆர்.குட்டித்தம்பி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), எஸ்.விஜயலக்சுமி (கரவெட்டி துன்னாலை).

இவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற் பகல் இசுறு பாயவிலுள்ளகல்வி அமைச்சின் கட்டடத் தொகுதியின் நான்காவது மாடியில் நடைபெறவுள்ளது.

எனவே வடக்கு மாகாணத்திலிருந்து தெரிவாகிய அனைவரும் நிகழ்வில் தவறாது கலந்து கொண்டு நியமனக்கடிதங்களை பெற்றுக்கொள்ளுமாறும்,

தவறின் மறுநாள் செவ்வாய்க்கிழமை கல்விஅமைச்சில் நேரடியாகச்சென்று பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்படி நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து செல்பவர்கள் வலயக்கல்விப்பணிப்பாளர்கள் ஊடாகபயண அனுமதியை பெற்றுக்கொள்ளுமாறும் வடக்கு மாகாணகல்விப்பணிப்பாளர் வீ.இராசையா கேட்டுள்ளார். (ந-5)

## வவு. முகாமிலிருந்து தப்பித்த கடற்புலிகளின் முக்கியஸ்தர் கைது

(வவுனியா)

விடுதலைப்புலிகள் அமைப்பின் கடற்பிரிவான கடற்புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் அறிவித்துள்ளனர். வவுனியா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் அங்கிருந்து தப்பிச்சென்று மறைவிடம் ஒன்றில் இருந்ததாகவும் கொழும்பிலிருந்து சென்ற பொலிஸ் சிறப்புப்பிரிவு ஒன்று இவரைக் கைது செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியா முகாம்களில் வந்திருப்பவர்களில் சுமார் 10 ஆயிரம் பேர் விடுதலைபுலிகள் அமைப் புடன் தொடர்புகளைகொண்டிருப்பவர்கள்என இனங்காணப்பட்டு தனியான முகாம்களில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (ந-5)

# உள்ளூராட்சி மாநாடு இன்று ஆரம்பம்

## அமைச்சர்கள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின்கீழ் உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தியை மேற்கொள்ளும் நோக்கில் இன்றும் நாளையும் யாழ்.நகரில் இடம் பெறவுள்ள உள்ளூராட்சி மாநாடு வடமாகாண அபிவிருத்திக்கு சிறந்த தளமாக அமையும் என வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட காலத்தின் பின் உள்ளூராட்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. இம்மாநாட்டின் நோக்கம் வட மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் தற்போது உள்ள அபிவிருத்தி செயற்பாட்டை மேம்படுத்தல், உள்நாட்டு ஜனநாயகத்தை மேம்படுத்தும் நோக்கமாக இம்மாநாடு அமையவுள்ளது.

இம் மாநாட்டு வடக்கின் வசந்தம் செயற்திட்ட குழுவின் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ, சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன் மற்றும் உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர்ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் அமைச்சின் செயலாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் கூட்டுறவு திணைக்களம், சமூக நலத்துறை திணைக்களம், சித்த வைத்தியப் பிரிவு, விவசாய திணைக்களம், தேசியமட்டத்திலான நகர அபிவிருத்தி அதிகார சபை,முதலீட்டாளர் சபை, தனியார் நிறுவனங்களும் இதில் கலந்து கொள்ளவுள்ளன.

இம் மாநாட்டின்போது தொழில் நுட்பம், கண்காட்சி, கலாசாரம் ஆகிய பிரதான அமர்வு கள் இடம்பெறவுள்ளன.

திணைக்களங்கள் தங்களுடையஉள்ளூர் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் புதிய தொழில் நுட்பங்களை உட்புகுத்தி நவீன மயமாக்கப்பட்ட கைத்தொழில் புரட்சியாக மாற்றமடைய செய்வதற்கும்,

கலை கலாசார பண்பாடுகளை மக்களிடையே நிலைநிறுத்திக்கொள்ளும் நோக்குடன் இவ் அமர்வுகள் இடம் பெற்றுள்ளன.

இம் மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் சிறந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான விருது, மாவட்டமட்டத்தில் சிறந்த உள்ளூராட்சி செயலாளர்களுக்கான விருது, உள்ளூராட்சிகளின் வளர்ச்சிக்காக நீண்டகாலமாக பணியாற்றிய ஓய்வுபெற்ற சிறந்த உள்ளூராட்சியாளர்களுக்கான விருது, பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கள் போன்ற நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (ந-7)

# ஈழத்தமிழரை பாதுகாக்க வலியுறுத்தி உலகத்தமிழர் பாதுகாப்பு மாநாடு

இலங்கைத் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வை வலியுறுத்தி ஜனவரி மாதம் கோவையில் உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாடு நடத்தப்படும் என்று புதிய தமிழகம் கட்சித்தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கூறியுள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

இலங்கையில் முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டுக்கிடக்கும் 3 இலட்சம் தமிழ் அகதிகளை அவர்கள் வாழும் இடங்களுக்கு அனுப்ப வலியுறுத்தி அக்டோபர் 2ஆம் திகதி டெல்லியில் பேரணி, ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

அன்றைய தினம் தமிழ் இளைஞர்கள் சிலர் அங்குள்ள இலங்கைத் தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு உணர்ச்சி வேகத்தில் சில பூந்தொட்டிகளை உடைத்திருக்கின்றார் கள்.

இதற்காக என் பேரிலும் கட்சி நிர்வாகிகள் 20 பேர் பெயரிலும் டில்லி பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இது ஒரு சாதாரண வழக்குத்தான் ஆனால் ஏதோ தீவிரவாதிகளை தேடுவதுபோல டில்லியிலிருந்து ஒரு இன்ஸ்பெக் டர் தலைமையில் 20 பொலிஸார் தமிழகத்துக்கு வந்து சென்னை, திருச்சி, நெல்லை போன்றபகுதிகளில் முகாமிட்டு தேடிவருகின்றனர்.

அத்துடன் புதிய தமிழகம் பற்றியும் மாவட்டச்செயலாளர்கள் வீடுகளுக்குச்சென்று அத்து மீறலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு தமிழக காவல்துறையும் இந்த அரசும் எப்படி அனுமதி வழங்கியது. சாதா ரண அரசியல் நடவடிக்கைக்காக டில்லிப் பொலிஸார் இவ்வாறு நடந்து கொள்வது மனித உரிமையை மீறிய செயலாகும்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வை வலியுறுத்தி ஜனவரி மாதம் கோவை யில் உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாடு நடத் தப்படும். இதில்பங்கேற்க அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்றார். (ந-5)


Brown & CO.PLC [IBS-O/A/D]

எமது அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த தீபத் திருநாள் வாழ்த்துக்கள்



அனைத்து வகை SHARP அலுவலக சாதனங்கள்

[Sharp Photo Copiers, Fax Machines, Cash Registers, Projectors, Olympus Camera, Sllmp Top Computers]



நிழற்பிரதி இயந்திரங்களுக்கு

- 01 வருடம் or 50,000 பிரதிகளுக்கு உத்தரவாதம்.
- 25,000 பிரதிகள் எடுக்கக் கூடிய Toner இலவசம்.
- முதல் வருடத்திற்கான இலவச திருத்தல் சேவை.

சிறப்புச் சலுகை

எம்மிடம் 3000.00 ரூபா பெறுமதிக்குமேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் 1ம், 2ம், 3ம் அதிர்ஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் முறையே 3000/=,2000/=, 1000/= பெறுமதியான பரிசுகள் அல்லது அடுத்த கொள்வனவில் விலைக்கழிவு

வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

- போலிகள் விலை குறைவானவை, தரமற்றவை.
- தரமற்ற உதிரிகள், உள்ளீடுகளை (Toners) கொள்வனவு செய்து உங்கள் பெறுமதி மிக்க இயந்திரங்களை பழுதாக்கிக் கொள்ளாதீர்கள்.
- அவ்வாறான இயந்திரங்களுக்கு நாம் உத்தரவாதம் வழங்க மாட்டோம்.

'விற்பனைக்குப் பிந்திய தரமான சேவை வழங்குநர்கள்'
மற்றும்
அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர்கள்.

டிஜிரல் எலக்ரோனிக்ஸ்,
62/16, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரான்லி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)

Authorized Dealer
Digital Electronics
62/16, Stanley Road,
Jaffna.

தொடர்புகளுக்கு :- 021 222 4040

(C-3527)



டயானா
பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.

K.K.S. றோட், இல. 6, கனகசபைலேன், வண்ணார்பண்ணை, சிவலிங்கப்புளியடி.
T.P.:021 222 8680 (C-3524)



மகளிருக்கான குறுகிய கால பயிற்சிகள்

கலாலயா பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

கடந்தமாதம் ஆரம்பமான புதிய வகுப்புகளில் செவ்வாய், புதன் பிரிவுகளுக்கு மட்டும் கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், தையல், Fabric Painting, Saree Work பயிற்சிகளுக்கு குறிப்பிட்டளவு புதிய மாணவிகள் உடன் அனுமதிக்கப்பட உள்ளனர்.

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப. 2.00 மணிவரை நேரில் அறிந்து கொள்ளலாம்.



குமரன் சில்க்ஸ்
Kumaran Silks

ஐந்தாண்டு பூர்த்தியை முன்னிட்டு குமரன் சில்க்ஸ் நடத்திய தீபாவளி அதிர்ஷ்ட சீட்டிழுப்பு முடிவுகள்:

1-ம் பரிசில் பற்றுச்சீட்டு இல.-184
2-ம் பரிசில் ; -4961
3-ம் பரிசில் ; -181

ஆறுதல் பரிசில்கள்: 4599, (04) 4810, (05) 4647, (06) 4641, (07) 4628, (08) 4643, (09) 4841, (10) 4671, (11) 4805, (12) 4829 (13)

(3804)

குமரன் சில்க்ஸ் இல.2A , பெரிய கடை வீதி , யாழ்ப்பாணம்.

# காலம் காட்டுவதற்கு அப்பால் வரலாறும் பேசுகிறது


காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தால் 2010 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி வெளியிடப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு பிறந்து சில மாதங்களின் பின் கலண்டர் வெளியிடும் எமது காலம் எது. எங்கள் மகத்துவத்தை, வரலாற்றை நாம் மீளப்பார்க்க வழி சமைத்துள்ளதெனலாம்.

தென்னிந்தியத் திரைப்பட நடிகர்களின் படங்களைத் தாங்கும் கலண்டர்களை வீட்டுச் சுவர்களில் தொங்க விட்டு எங்கள் வீட்டுச் டர் வெளியிடலாம். இது எங்கள் இளம் சந்ததிக்கு வரலாறு கூறும் என்ற உண்மை நியாயப் படுத்தப்பட்டுள்ளது.

வீட்டில் தினம் தினம் பார்க்கும் போதெல்லாம் ஆறுமுக நாவலரின் சமயப் பணியை




## காரைநகர் வாரிவளவு விநாயகர் ஆலயத்தின் 2010 கலண்டர்

கடந்த கலாசாரத்தை உடைத்தெறியும் வகையில் மூன்று மாதங்களுக்கு முன்னதாக அடுத்த ஆண்டின் நாட்காட்டியை வெளியிட்டிருப்பது பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

இதற்கு அப்பால் சமகாலக் கலண்டர் அமைப்பின் பயனற்ற தன்மையை மாற்றிப் புதியதோர் அத்தியாயத்தை காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம் செய்துள்ளது.

சூழமைவில் சினிமாக் கலாசாரத்தைப் புகுத்தும் மடமைத்தனத்தை முறியடிக்கும் வகையில் சைவமும் தமிழும் காத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பெருமைகளைப் பேசும் படங்களைக் கலண்டரில் பதித்து இப்படியும் கலண்டர் ...

யும், தமிழ்ப் பணியையும், நாடு கடந்த அவரின் அறப்பணியையும் எடுத்துக் கூறும் புதுமையைப் புகுத்திய காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் அறங்காவலர் சபையின் தலைவர் எஸ். சிவஞானம் அவர்களினதும், அறங்காவலர் சபை நிர்வாகிகளினதும் பணிபாராட்டுக்குரியதும் பின்பற்றக் கூடியதுமாகும்.

**விதுரன்**

## கந்த சஷ்டி விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்வள ஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமி திருக்கோவிலில் கந்த சஷ்டி விழா நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 6 நாட்கள் நடைபெறவுள்ளன.

இதில் 6ஆவது நாளான 24ஆம் திகதி சனிக்கிழமை சூரசங்காரமும் 25ஆம் திகதி திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ)

## பரந்தன் பூநகரிப் பகுதிக்கு வெள்ளிக்கிழமை முதல் மின்சாரம்

### மின்சக்தி அமைச்சுத் தகவல்

(கொழும்பு)

பரந்தன், பூநகரி, வற்றாப்பளை உட்பட பல பிரதேசங்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை முதல் மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

30 வருட மோதல் காரணமாக வட பகுதியில் உள் பல கிரா மங்கள் மின்சார வசதியின்றி காணப்பட்டதோடு, உப மின் நிலையங்கள், மின்சார கோபுரங்கள் என்பன சேதமடைந்திருந் தன.

வடக்கு வசந்தம் 180 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் வடக்கில் மின்சார வசதியற்ற சகல கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்க மின்சக்தி எரிசக்தி அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கையின் கீழ் இந்தப்பிரதேசங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்படவுள்ளது. இதற்காக 60 மில்லியன் ரூபா செலவிடப் பட்டுள்ளது.

வடக்கில் உள்ள சகல கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிப்பதற்காக 3 வருட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு 11 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. (ஓ-4)

## தாச்சிப் போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

சங்கானைக் கோட்ட பாடசாலைகளின் தாச்சிச் போட்டியில் ஆண், பெண் ஆகிய இரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு,

**ஆண்கள்** – வட்டு இந்துக் கல்லூரி, தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை, வட்டு கார்த்திகேசா வித்தி.

**பெண்கள்** – பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தி, சுழிபுரம் ஐக்கிய சங்கம் வித்தி, சுழிபுரம் ஆறுமுகம் வித்தி. (ஓ)

## முட்கம்பி வேலிக்குள் மக்களை அடைத்துவிட்டு தேர்தலை நடத்துவது சர்வதேச சட்டங்களுக்கு மாறானது

(கொழும்பு)

முட்கம்பி வேலிகளுக்குள் மக்களை அடைத்து வைத்துக் கொண்டு நாட்டில் தேர்தல்கள் நடத்தப்படுவது சர்வதேச சட்டங்களை மீறும் செயற்பாடாகும். இந்த நடவடிக்கையால் வெளிநாட்டு உதவிகளை இழக்க வேண்டிய நிலையேற்படும் என்று ஐ.தே.க. எச்சரித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பாக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரே நிலைப்பாட்டில் இருப்பதாகவும் அக்கட்சி தெரிவித்தது. கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில் உரையாற்றும் போதே ஐ.தே.க. கண்டி மாவட்ட எம்.பி.லக்ஷ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த ஒன்றரை வருட காலமாக அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி வந்தது.

இறுதியாக இடம்பெற்ற தென்மாகாண சபைத் தேர்தலில் மக்கள் அரசுக்கு சிவப்பு சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே, பொதுத் தேர்தலை நடத்தினால் மக்கள் ஆணை யாருக்கு இருக்கின்றதென்பது வெளியாகும்.

எமது சொந்த நாட்டு மக்களையே முட்கம்பி வேலிகளுக்குள் அடைத்து வைத்துக் கொண்டு நடமாடும் சுதந்திரத்தை வழங்காது இராணுவத்தை பாதுகாப்புக்கு வைத்துக் கொண்டு நாட்டில் தேர்தல்களை நடத்துவதென்பது சர்வதேச சட்டங்களை மீறும் செயலாகும்.

இதனால் சர்வதேச நாடுகளின் உதவிகளையும் நாம் இழக்க வேண்டி நேரிடும்

ஐ.நா.வின் அனைத்து சாசனங்களிலும் நாம் கையெழுத்திட்டுள்ளோம். எந்த அரசாங்கத்தின் காலத்தில் இவை கைச்சாத்திடப்பட்டது என்பதல்ல முக்கியம். எவர் ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேச சட்டங்களை மதிக்க வேண்டியது கட்டாயமானதாகும் என்று தெரிவித்தார். (ஓ-6)

## கண்ணீர் அஞ்சலி

### சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள்–வடகோவை

(பிரதமசிவாச்சாரியார்– நயினை
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்
நயினாதீவு)



வசிட்ட முனியிவரோ வென்று வரிந்த தோற்றம்
வார்த்தையினில் வேத ஒலி வடிக்கும் பாங்கு
குருத்துவத்தின் பழமையினை உணர்த்தும் கோலம்
கொள்கைதனில் சான்றோனாய் குன்றின் நேர்மை
ஆகமங்கள் அத்தனையும் ஆற்றல் மிக்கோன்
அன்னையவள் பாதத்தில் அடிமையானோன்
பத்ததிகள் தவறாது பூசை செய்வோம்
பரவசத்தில் பார்த்திருப்போர் கைகள் சேரும்
இடம்பெயர்ந்த காலமது இன்றும் நெஞ்சில்
தொடர்ந்து உனை நினைக்க வைக்கும் தேவி பாதம்
மறந்திடாமல் மகோற்சவத்தின் முதல்நாள் இரவு
மனம் மகிழ மரக்கலத்தில் வந்து சேர்ந்தார்
குறைவின்றி பூசையெலாம் செய்து வைத்து
நிறை மனமாய் அன்னையிடம் ஆசி பெற்றாய்
குலமகனாம் முத்துதனை பூசை செய்ய
முறை வழியாய் மாட்சியினில் இருத்தி வைத்து
இறைவியவள் பாதத்தில் இணைந்து கொண்டாய்
எங்கள் மலர்க் காணிக்கை ஏற்றுக்கொள்வாய்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

அறங்காவலர் சபை,
நயினாதீவு,
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்.

(3803)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்


யா/ நாரந்தனை கணேஷா
வித்தியாலயம்
**புவனேஸ்வரன் விதுஷா**
(புள்ளி 156)





கல்வி நலம் இனிதாகி
காலமெல்லாம் களிப்பாகி
கற்றவரின் சபை நடுவே
காவியத்து நாயகியாய்
காலமெல்லாம் நீ உயர
கனிவோடு வாழ்த்துகின்றோம்
வாழ்க! வளர்க!

ரகு குடும்பத்தினர்
ஊர்காவற்றுறை.

(3801)



யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்தசிங்கப்பூர்வெளி விவகார அமைச்சர் ஜோர்ஜ் கியோ தலைமையிலான குழுவினர் யாழ். பொது நூலகத்திற்கு சென்று நூல்களை கையளித்தனர். இந் நிகழ்வின் காட்சிகளை படங்களில் காணலாம் (தொடர்பு பற்றிய செய்தி முதலாம் பக்கத்தில்)

## மஞ்சி கிண்ணத் தொடரில்

# யாழ். மாவட்ட பாடசாலைகள் அணி காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியது

(கொழும்பு)

மஞ்சி கிண்ண கிரிக்கெட் தொடரில் முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட அணி காலிறுதிக்கு முன்னேறியது.

கொழும்பு வெஸ்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் மஞ்சி பிஸ்கட் கம்பனியின் அனுசரணையில் நடைபெறும் 19 வயதுக்குட்பட்ட ஆறு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான மட்டுப்ப டுத்தப்பட்ட 5 ஓவர்கள் கிரிக்கெட் போட்டி கொழும்பில் நடை பெற்றுவருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொழும்பு லைசியம் சர்வதேசப் பாடசாலை அணியுடனான போட்டியில் யாழ். மாவட்ட பாடசாலைகள் அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட பாடசாலைகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய லைசியம் சர்வதேச பாடசாலை அணி 5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மதிஷா 21, கிஷான் 17, கபில 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மிலாண்டோ, எடின் மற்றும் ஜனோடின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட பாடசாலைகள் அணி 4.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 64 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் எடின் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் மிலாண்டோ 17 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஸ்வீன், அப்துர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

முதலாவது போட்டியில் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட பாடசாலைகள் அணி நேற்று கல்கிசை சென் தோமஸ் கல்லூரி அணியை சந்தித்தது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கல்கிசை சென்.தோமஸ் கல்லூரி அணி 5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 57 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டினேஷ் 18, நுவான் 15, சமந் 11 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்து வீச்சில் எடின், மிலாண்டோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட பாடசாலைகள் அணி 4.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 58 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றிபெற்றது.


இதில் நவநீதன் 14 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்ததுடன் எடின் 14 ஓட்டங்களையும் மிலாண்டோ 6 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இதன் மூலம் தொடரில் 2 வெற்றியைப் பெற்ற யாழ். மாவட்ட பாடசாலைகள் அணி காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

# ஆஸி. இருபது-20 அணியின் தலைவராக கிளார்க் நியமனம்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய இருபது-20 அணிக்கு புதிய அணித்தலைவராக மைக்கெல் கிளார்க் நியமிக்கப்பட்டுள்ளார். துணைத்தலைவராக கமரூன் வையிட் தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.



சமீபத்தில் இருபது-20 கிரிக்கெட்டிலிருந்து ஓய்வை அறிவித்தார் அவுஸ்திரேலிய அணியின் வெற்றித்தலைவர் ரிக்கி பொண்டிங். இதனால் புதிய அணித்தலைவரை நியமிக்க அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை முடிவு செய்தது.

இதன்படி இருபது-20 அணியின் புதிய தலைவராக மைக்கெல் கிளார்க் நியமிக்கப் பட்டுள்ளார். இவரது ஆதரவுடன் வையிட் துணைத் தலைவர் பொறுப்ப ஏற்கிறார்.

இது குறித்து மைக்கெல் கிளார்க் கூறுகையில்,

அவுஸ்திரேலிய இருபது-20 அணிக்கு தலைவராக செயல்பட உள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது.

ரிக்கி பொண்டிங்கின் ஆலோசனை எனக்கு பெரும் உதவியாக அமையும் என நம்புகிறேன் அவரிடம் இருந்து நான் நிறைய கற்றுக் கொண்டேன் இவ்வகைப் போட்டிகளில் அவுஸ்திரேலியா பெரிய அளவில் இதுவரை சாதிக்கவில்லை. இனிவரும் போட்டிகளில் சிறப்பாக செயல் பட்டு அசத்துவோம் என்றார்.

# டயமண்ட் ஈகிள்ஸ் அணி அபார வெற்றி

## அரையிறுதி வாய்ப்பையிழந்தது சாமர்சட்



(ஐதராபாத்)

சம்பியன்ஸ் லீக் சுப்பர்-8 போட்டியில் ஈகிள்ஸ் அணி, சாமர்சட் அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன் மூலம் ஈகிள்ஸ் அணி அரையிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்திக்கொண்டது. சகலதுறையிலும் சொதப்பிய சாமர்சட் அணி தொடரிலிருந்து வெளியேறியது.

சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் இந்தியாவில் நடக்கிறது. நேற்று முன்தினம் ஐதராபாத்தில் நடந்த சுப்பர்-8 போட்டியில் ஏ பிரிவில் இடம்பெற்றுள்ள இங்கிலாந்தின் சாமர்சட், தென்னாபிரிக்காவின் டயமண்ட் ஈகிள்ஸ் அணிகள் மோதின. சாமர்சட் அணியில் உடல் நலம் பாதிக்கப்பட்ட டிரஸ்கோதிக் நீக்கப்பட்டு, டர்ஸ்டன் வாய்ப்புப் பெற்றார். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சாமர் சட் அணித்தலைவர் ஜஸ்டின் லாங்கர் துடுப்பாட்டத்தை தேர்வுசெய்தார்.

### டிவில்லியர்ஸ் மிரட்டல்

ஈகிள்ஸ் அணியின் கார்னீலியஸ் டிவில்லியர்ஸ் வேகத்தில் சாமர்சட் அணி ஆட்டம் கண்டது. இவரது பந்துவீச்சில் கீஸ்வெட்டர் (08), சுப்பையா (0), டிபுருயன் (02) வெளியேறினர். லாங்கர் (12) ஏமாற்றினார். இதையடுத்து 9 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 52 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது.

இதற்குப்பின் ஹில்டிரத், டர்ஸ்டன் இணைந்து போராடினர். ரியான் மெக்லாரன் வீசிய ஆட்டத்தின் 15ஆவது ஓவரில் டர்ஸ்டன் ஹட்ரிக் பவுண்டரி அடித்தார். 32 பந்தில் 57 ஓட்டங்கள் எடுத்த டர்ஸ்டன், டிவில்லியர்ஸ் பந்தில் ஆட்டம் இழந்தார். ஹில்டிரத் 31 ஓட்டங்கள் எடுத்தார். சாமர்சட் அணி இருபது ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

### வான் விக் அபாரம்

சுலப இலக்கை விரட்டிய ஈகிள்ஸ் அணிக்கு வான்விக் அபார ஆரம்பம் தந்தார். ரோசாவ் (13) அதிக நேரம் நீடிக்கவில்லை. ஆட்ரியன் மெக்லாரன் (13), டிப்பனார் (18) ஓரளவு கைகொடுத்தனர்.

ஒரு பக்கம் விக்கெட் சரிந்தாலும் மறுபக்கம் அபார ஆட்டத்தை தொடர்ந்த வான்விக் 47 ஓட்டங்களுக்கு (4 பவுண்டரி, ஒருசிக்ஸர்) வெளியேறினார்.

கடைசிக்கட்டத்தில் பெய்லி 29 பொறுப்பாக ஆட, ஈகிள்ஸ் அணி 18.4 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 133 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

இதன் மூலம் இரண்டு புள்ளிகள் பெற்ற ஈகிள்ஸ்அணிஅரையிறுதிவாய்ப்பைதக்கவைத்துக் கொண்டது. புள்ளி எதுவும் பெறஇயலாத சாமர்சட் அணிதொடரிலிருந்து வெளியேறியது.

# இலங்கையில் இடம்பெற்ற யுத்தமே மக்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்ல காரணம்

## அவுஸ்திரேலிய பிரதமர் றூட்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இராணுவ யுத்தமே அந்நாட்டு மக்கள் உலகெங்கும் தப்பிச் செல்வதற்கு காரணம் என்று அவுஸ்திரேலிய பிரதம மந்திரி கெவின்றூட் கடந்த வியாழக்கிழமை ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் மக்களை சட்டவிரோதமாக அழைத்து வருவது எல்லைப் பாதுகாப்பு ஆகியன தொடர்பான நாட்டின் கடும் சட்டங்களை அவுஸ்திரேலிய அரசாங்கம் தளர்த்தி விட மாட்டாது என்றும் அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

எந்தத் தனிநபரையும் சோதனை செய்யும் போது அவர் சட்ட விதிகளுக்கு உட்பட்டு புகலிடம் கோருவோராக காணப்படாவிட்டாலும் அவரை நாங்கள் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்புவோம் என்று அவர் கூறினார்.

ஏற்கனவே அவ்வாறு காணப்பட்ட சிலர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டதை பிரதமர் றூட் சுட்டிக்காட்டினார். எதிர்காலத்திலும் அவ்வாறே செயற்படும் என்றும் அவர் கூறியதாக பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பியர்களுடன் பேசினாலும் தென்கிழக்கு ஆசியர்களுடன் பேசினாலும் ஏனைய நாட்டவர்களுடன் பேசினாலும் இதுதான் அனைவரும் எதிர்நோக்கும் பிரச்சினையாகும்.

எனவே தான் எமது நண்பர்களான இந்தோனேசியர்களுடன் இந்த சவால்கள் குறித்து நெருக்கமாக பேசி வருகிறோம்.

தொடர்ந்தும் இதே போக்கை கடைப்பிடிக்கப் போவதாகவும் அவர் கூறினார். மக்கள் வெளியேற்றம் இலங்கையிலிருந்து மட்டுமன்றி ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்தும் இடம்பெறுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-6)

# நீதி அமைச்சர்கள் அடங்கிய குழு சிறைச்சாலைக்கு விஜயம்

நீதி அமைச்சர் மிகிந்த மொறகொட நேற்று முன்தினம் யாழ் சிறைச்சாலைக்குச் சென்று சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் கைதிகளுடன் உரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்த நீதி யமைச்சர் யாழ் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடிய பின்னர் சிறைச்சாலைக்குச் சென்றனர்.

அங்கு சிறைச்சாலைக் கட்டடம் அமைப்பது தொடர்பாக விளக்கமளித்ததுடன் கைதிகளுடனும் கலந்துரையாடினார்.

இவ் விஜயத்தின் போது நீதியமைச்சின் செயலாளர் சுகத் கம்லத் சிறைச்சாலை அத்தியட்சகர் பி.ஆர்.டி.சில்வா ஆகியோரும் சென்றிருந்த இதேவேளை சிறைச்சாலையில் நிலவும் ஆளணிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் அமைச்சர் உறுதி வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-1)

# மத்திய வங்கியின் ஆளுநர் திங்களன்று யாழ் வருகிறார்

இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் அவர் யாழ். ஸ்ரான்லி வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள என்.டி.பி வங்கியையும், யாழ் பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக் கிளையையும் திறந்து வைக்கிறார்.

அத்துடன் பல்வேறு கடன் திட்டங்களையும் அவர் அறிமுகம் செய்து வைக்கவுள்ளார்.

மறுநாள் 20 ஆம் திகதி யாழ் பொது நூலகத்தில் அரச அதிபர், சமூக சேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி உள்ளிட்ட உயர் அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார். (ச-5)


பாடசாலைக் கல்வியை
அண்மையில் பூர்த்தி செய்த
மாணவர்களுக்கு
ஹற்றன் நஷனல் வங்கி
யாழ் குடாநாட்டில்
நடாத்தும் ஆரம்ப வங்கியியல் மற்றும்
வணிகத்துறைச் சான்றிதழுக்கான
கற்கை நெறி

| | |
|---|---|
| அனுமதிக்கான தகமைகள் | • 22 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்<br>• க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 5சிறப்புச் சித்திகளுடனும் கணிதபாடம், ஆங்கிலமொழி அல்லது வர்த்தகமும் கணக்கியலும் பாடங்களில் ஏதேனுமொரு பாடத்தில் விசேட சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்<br>• க.பொ.த. உயர்தரத்தில் ஒருபாடத்தில் சிறப்புச்சித்தியும், இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும்பெற்றிருத்தல் வேண்டும் |
| பாடநெறியில் உள்ளடக்கப்படும் பாடங்கள் | • வியாபாரமும் வங்கியியலும்<br>• கணக்கியல்<br>• பொருளியல்<br>• முகாமைத்துவமும் கட்டமைப்புகளும் |
| பாடநெறி கற்பிக்கப்படும் மொழி | ஆங்கிலம் |
| காலம் | 60 மணித்தியாலங்கள் |
| இடம் | HNB சுன்னாக வாடிக்கையாளர் நிலையம் |

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பிப்பதற்கும் http://www.hnb.net என்னும் இணையத்தளத்தில் "Careers at HNB" பகுதியினை பார்க்கவும். அனைத்து விண்ணப்பங்களும் மேற்குறிப்பிட்ட இணையத்தளத்தினூடாக 31.10.2009 முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

HNB


HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

# சீன கைத்தொழிலாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு நல்ல சந்தர்ப்பம் கிட்டியுள்ளது

## சீனாவில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

நட்பு நாடு என்ற வகையில் சீனா இலங்கைக்கு பெற்றுக்கொடுத்துள் ள உதவி உபகாரங்கள் மற்றும் ஏனைய வரப்பிரசாதங்களுக்காக அரசாங்கம் தனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்ற அதேவேளை இலங்கையில் முதலீடு செய்வதற்கு சீன கைத்தொழிலாளர்களுக்கு இப்போது நல்ல சந்தர்ப்பம் கிட்டியுள்ளது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

சீன சிங்ஜான் மாகாணத்தில் நடைபெறுகின்ற 10ஆவது வர்த்தகக் கண்காட்சியை திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொள்ளச் சென்றுள்ள பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சீன கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் லீயுகி பாவோவை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



சீன கம்யூனிஸ்ட் கட்சி செய லாளரிடம் பிரதமர் மேலும் கூறுகையில் ,

இலங்கையில் முதலீடு செய்வதற்கு நல்ல சந்தர்ப்பம் கிட்டியுள்ளதுடன் அங்கு கைத்தொழில் துறையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருமாறு சிங்ஜான் மாகாண கைத்தொழிலாளர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் அழைப்பு விடுக் கின்றேன்.

விரைவாக அபிவிருத்தியடைந்து வரும் சீனா ஆசியாவிற்கே பெரும் நன்மதிப்பை பெற்றுக்கொடுத்துள்ளது. சீனா சகல விடயங்களிலும் சுயமாக இயங்கக் கூடிய நாடாகும்.

அதன் கலாசாரம் பெறுமதிமிக்கது என்பதனை நாம் மறந்து விடவில்லை. ராஜதந்திர மட்டத்தில் மட்டுமல்லாது சாதாரண பொது மக்கள் ஊடாகவும் நாடுகளுக்கிடையில் நட்புறவை வளர்த்துள்ளது. இதற்கு சீன- இலங்கை சகோதர சங்கம் நல்ல உதாரணமாகும்.

இலங்கையில் வடக்கு மட்டுமல்லாது கிழக்கு நிலங்களும் அதற்குப் பொருத்தமாக காணப்படுகின்றன. இந்த மாகாணத்தை விவசாய ரீதியில் அபிவிருத்தி செய்வதற்கு கைகோர்க்குமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம் என்றார். (ஓ-4)

## மீண்டும் கடமையில்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் முன்பு கடமையாற்றிய வைத்திய கலாநிதி அருணா புண்ணிய மூர்த்தி மீண்டும் கடந்த 15 ஆம் திகதி முதல் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். இவரை ஊர்காவற்றுறை மக்கள் குதூகலமாக வரவேற்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-72)

## இலவச கண்பரிசோதனை முகாம்

தென்மராட்சி லயன்ஸ் கழகம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி வலய கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் இலவச கண்பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை வலய கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நலன்புரி நிலைய மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்காக நடைபெறவுள்ளது. (ஓ-29)

# அரசு இடம்பெயர் மக்கள் மீது மாறுபட்ட பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துள்ளது ஐ.தே.க

இலங்கை அரசாங்கம் இடம்பெயர் மக்கள் மீது மாறுபட்ட ஓர் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிப் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் மாற்று வழிகளில் அரசாங்கம் பயங்கரவாதத்தை முன்னெடுத்து வருவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இடம்பெயர் முகாம்களில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஊடுருவியிருப்பதாக தெரிவித்து அரசாங்கம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-4)

# உலகப் புகழ் பெற்ற அமெரிக்க வர்த்தகரான இலங்கையர் கைது

(கொழும்பு)

குற்றச் சாட்டின் பேரில் இலங்கையரான புகழ் பெற்ற அமெரிக்க தமிழர் வர்த்தகர் ராஜ் ராஜரட்னம் கைது செய்யப்பட்டுள்ளார்.

உலகப் பிரசித்தி பெற்ற கெலொன் நிறுவனத்தின் உரிமையாளரும் உலக செல்வந்த வரிசையில் 559 ஆம் இடத்தை வகிப்பவருமான ராஜ் ராஜரட்ணம் நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பங்குச் சந்தை மற்றும் நிதிச் சந்தை கொடுக்கல் வாங்கல்களின் போது மோசடியான முறையில் இலாபமீட்டியுள்ளதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையில் நடைபெற்ற இவ்வாறான சட்டவிரோத வர்த்தக நடவடிக்கைகளின் மூலம் 20 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு மறுவாழ்வு அளிக்க நிதி உதவி வழங்குவதாக ராஜரட்னம் ஒப்புக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)


# இதய பூர்வமான நன்றிகள்



அமைச்சர்
டக்ளஸ் தேவானந்தா



வைத்திய கலாநிதி
ஆ. கேதீஸ்வரன்

ஊர்காவற்றுறை மண்ணில் மருத்துவப் பணியுடன் மனித நேயப் பணிபுரிந்து இடம் மாற்றம் பெற் றுச் சென்ற வைத்திய கலாநிதி அருணா புண்ணிய மூர்த்தி அவர்களின் சேவை மீண்டும் எம் மக்களுக்கு கிடைப்பதற்கு காரண கர்த்தாவாக இருந்த சமூக சேவை, சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் ஐயா அவர்களுக்கும் எமது பிரதேச ஈழமக்கள் ஜன நாயக கட்சி அமைப்பாளர் திரு. காந்தன் தோழர் அவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பிரதேசத்தினதும் மக்களினதும் அழைப்பை ஏற்று மீண்டும் எம் மண்ணுக்கு தம் சேவையை வழங்க வருகை தந்திருக்கும் வைத்திய கலாநிதி அருணா புண்ணிய மூர்த்தி அவர்களுக்கும் எம் மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.



வைத்திய கலாநிதி
அருணா



காந்தன் தோழர்

ஊர்காவற்றுறை
வாழ் மக்கள்

(3802)


# உலகுக்கு உணவளித்த உத்தமர்

## நோர்மன் போர்லாக்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 9-XVI

**பசுமைப்புரட்சியில் கறை படிந்த நிகழ்வுகள்**

ஏழைகளுக்கு உணவு, ஏழ்மையை



உலக பசுமைப் புரட்சியின் தந்தை கலாநிதி நோர்மன் போர்லாக்

விரட்டிட ஆங்கே பயிருற்பத்தியை அதிகரித்தார். பசி பட்டினியால் வாடி வதங்கிய மக்களுக்கு ஒரு வேளை உணவு கொடுத்த பசுமைப் புரட்சி சந்தித்த சோதனைகளும் வேதனைகளும் எண்ணிலடங்காதவை.

அதிசயிக்கத்தக்க நிகழ்வுகளும் நடந்தேறின. மனிதம் இப்படியும் அல்லல் படுமா? வாருங்கள் அந்த கறை படிந்த நிகழ்வுகளையும் அலசிப் பார்ப்போம். அவசியம் தெரிந்திருக்க வேண்டிய விடயங்கள் இவை.

**அமெரிக்காவின் அங்கலாய்ப்பு**

உலகிலுள்ள ஏழைகளுக்கு ஒருவேளை உணவு கொடுக்க தனது உழைப்பை முழுவதுமாக ஈந்த உத்தமர் போர்லாக் ஒரு அமெரிக்கர்.

ஆனால் அவரது இந்த பசுமைப் புரட்சியையும், பசிபட்டினியால் வாடும் மக்களை உணவு கொடுத்து உயிர்ப்பித்ததனையும் அமெரிக்க வல்லாதிக்கம், செல்வந்தர் கூட்டம் ஆதரிக்கவுமில்லை அங்கீகரிக்கவுமில்லை.

போர்லாக்கின் விளைச்சலை பலமடங்காக பெருப்பிக்கும் உத்தி அமெரிக்காவுக்கு மட்டுமே தேவைப்படுவதாக இருக்க வேண்டுமென அன்றைய ஏகாதிபத்தியம் எகிறி கொக்கரித்தது. தனது நாடு மட்டும் அனைத்திலும் தன்னிறைவு காண வேண்டும் எனவும் ஏனைய நாடுகள் அமெரிக்காவை உணவுக்காகவும் இன்னும் பலவற்றுக்காகவும் கையேந்தி நிற்க வேண்டுமெனவும் அமெரிக்கா எப்போதுமே நினைத்திருக்கிறது.

குறிப்பாக ஆசிய ஆபிரிக்க நாடுகள் தலை நிமிர கூடாது என்பதில் அமெரிக்க வல்லாதிக்க கொள்கைகள் எப்போதுமே வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த அடிமைவாத கொள்கைகளினுள் உணவுக் கொள்கையும் உள்ளடக்கம்.

அதாவது உலக நாடுகளனைத்தும் உணவுக்காக அமெரிக்காவிடம் பிச்சையெடுக்க காத்திருக்க வேண்டும் என அது நினைத்தது. இதனால் போர்லாக்கினுடைய பரந்துபட்ட உணவு அபிவிருத்தி செயற்பாட்டிற்கு பலவிதமான முட்டுக் கட்டைகளை போட நினைத்தன. அவ்வப்போது தடைகளை செய்தும் காட்டின. புதிய திருந்திய இனங்களை உருவாக்கும் தொழில்நுட்பத்தினை ஏழை நாடுகளுக்கு கொடுக்கக்கூடாது என்பதே அந்த அறிவுறுத்தலாகும்.

குப்பையில் கிடந்தாலும் குன்றுமணி மங்கிடுமா? உணவுப் புரட்சி தந்தையான போர்லாக் என்றுமே எமக்கு குன்றுமணி தான். அமெரிக்க வல்லாதிக்க குப்பையினுள் உதித்த குன்றிமணி இவ்வாறான அடக்கு முறை அரசியல் பித்தலாட்டங்களுக்கு இயைந்து கொடுக்கவில்லை.

உலக நாடுகளின் மூலை முடுக்குகளுக்குள்ளும் தனது நோக்கங்களை தெளிவுபடுத்தி அனைவரையும் ஒன்றிணையச் செய்த போர்லாக்கின் கைங்கரியம் அக்கால அமெரிக்க ஆதிக்க வலிமையை எதிர்த்து உடைத்தெறிந்ததெனலாம்.

**அமெரிக்காவின் இழிசெயல்**


அதிகரித்த உற்பத்தியினால் அமெரிக்கா உணவுற்பத்தியில் தன்னிறைவு கண்டவுடன் ஏனையோருக்கு இவ் வசதி கிடைக்க வழி செய்யுமா என கவலை கொண்டீர்களா? நியாயமான கவலையென்றாலும் அமெரிக்காவிற்கு அது கசப்பான தொழில்நுட்பம்.

அமெரிக்கா என்றும் எப்போதும் எதிலுமே 'சண்டியன்' தர வரிசையில் அமரவே விரும்பியது என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக் காட்டன்றோ! புதிய வகை தொழில்நுட்பங்களுக்கு ஆரம்பத்தில் சொந்தக்காரன் அமெரிக்கா தான். அதனாலேயே வல்லரசு வரிசையில் அனைவரையும் தட்டிக் கேட்கும் திருவாளர் 'சண்டியன்' ஆக இருக்க எப்போதும் இப்போதும் நினைக்கிறது. அதற்கான அத்திவார்த்தையே அங்கு வந்த ஆட்சியாளர்கள் செய்து ஒப்பேற்றினார்கள்.

ஐயகோ! உணவின்றி இங்கு பலர் உடல் உருகி, குறுகி, மெலிந்து அவதிப்பட்டு உயிர் விடும் போது அங்கே அமெரிக்க அரசு அதிகமான உணவை கடலில் வாரியிறைத்து கொட்டிக் கொண்டிருக்கிறதாம். விசித்திரமான செய்கையென நாம் நினைத்தாலும் அங்கே அவர்களினுடைய மேதாவித்தனமே மேலோங்கி தான் தனது என தம்பட்டமடிக்கும் கொடிய விந்தையிது காணீர்!

ஏழை அழுத கண்ணீர் ஆறாகி கடைசியில் கடலில் உப்புக்கரித்ததே தவிர கதறிய முத வாய்க்கு ஒரு குவளம் உணவைக் கூட தர நாதியற்றும் போனது. அமெரிக்காவில் உணவுற்பத்தி தாராளமாக, மேலதிகமாக உருவானபோது இங்கே ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உணவின்றி உயிர்கள் ஒவ்வொன்றாக மடிந்தனவே. பசித்தவனுக்கு உணவு கொடுப்போம் என்றொரு செய்தி வல்லாதிக்க நாட்டிலிருந்து வரவில்லையே. இனியும் வராது. எப்படி வரும்?

உணவு தேவையெனில் உணர்ந்தெழக் கூடாது. என்றும் நீ அடிமையாக என் காலடியிலே கிடந்தால் உயிர் தரும் உணவு தருவேன் என்றாரே! இப்படியொரு நாட்டிலிருந்தா எமக்காகவொரு குரல் எழும்பும்? அல்லலுற்று, அகதிப்பட்டு,



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

அநாதரவாய் ஆன இந்த பாவப்பட்ட மனித உயிர்கள் பாவிகளாய் பரதேசி வாழ்வினுள் சிறைப்பட்டு உண்ண உணவின்றி இருந்தவொரு உயிரை விட வல்லாதிக்கமும் ஒரு காரணமன்றோ.

தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிட்டு நல்ல மனிதர் இவர் நஞ்சான கதை என்றும் ஏழ்மைப்பட்ட வறிய நாடுகளுக்கு வரலாற்று உதாரணம் இருப்பினும் அந்த நஞ்சுக் கொடியிலிருந்தும் நல்ல பாம்பு சீறியெழும்.

அதற்குக் காரணம் எங்களுக்கொரு பசுமைப் புரட்சியின் தந்தை நோர்மன் போர்லாக்.

அமெரிக்க அரசும், கோலோச்சிய பாரிய கம்பெனிகளும் உணவு விற்பனையில் வறிய நாடுகளை ஆட்டிப் படைத்தனவேயன்றி அவற்றினது நல்வாழ்வுக்காக மனித மேம்பாட்டுக்காக கரிசனை கொண்டிருக்கவில்லை. (தொடரும்)

# யாழ். மாவட்ட மேட்டு நிலங்களில் மானாவாரியாக மறுவயற் பயிர்ச்செய்கை

**சோளம்**

**விதைக்கும் காலம்:-** ஐப்பசி மாத முதல் மழையுடன் நிலத்தினைப் பண்படுத்தி நிலம் நன்கு ஈரலிப்பாக இருக்கும் போது நடுகையை மேற்கொள்வதனால் சிறந்த பயிர் அடர்த்தியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பிந்திய நடுகையால் சில சமயம் பயிரின் புதிய வளர்ச்சிக் காலத்தில் நீர் கிடைத்தல் குறைவடைந்தால் விளைவில் பாதிப்பை ஏற்படுத்தும்.

**வர்க்கம்-**ருவான் இனம் சிறப்பான விளைவினை மானாவாரியில் கொடுக்கக் கூடியது.

**நடுகையும் நடுகை இடைவெளியும்**

வரிசைகளில் விதைப்பு சிறந்தது. வரிசைகளுக்கிடையில் 60 ச.மீ உம் பயிர்களுக்கிடையிலும் 30 ச.மீ அவசியம்.

மண்ணின் ஈரலிப்பு உள்ள போதே விதைகள் நடப்பட வேண்டும். ஒரு குழியில் ஒரு தாவரம் என்ற வகையில் நடுகையை மேற்கொள்ளவும்.

**விதை தேவை**

ஹெக்ரயருக்கு 16-20 கி.கி.

**வளமாக்கியிடல்**

அடியுரம் - யூரியா-50 கி.கி /ஹெக்ரயர், சுப்பர் பொசுபேற்று-100 கி.கி / ஹெக்ரயர், மியுரேற்றுப் பொற்றாசு-50 கி.கி / ஹெக்ரயர்

மேற்கட்டுப்பசளை- யூரியா-100 கி.கி / ஹெக்ரயர் (4 ஆம் வாரத்தில்)

**களைக் கட்டுப்பாடு**

பயிரின் ஆரம்ப வளர்ச்சியின் போது களைகட்டல் முக்கியமானதாகும். பயிர் விதைத்து மூன்றாவது ஆறாவது கிழமைகளில் மண்வெட்டி கொண்டு களைகட்டல் சிறந்தது.

**பூச்சி பீடை தாக்கம்**

அழுக்கணவன், தண்டு துளைப்பான் போன்றவற்றால் பாதிப்புக்கள் ஏற்படலாம். பாதிப்பு ஏற்பட்டுள்ளதை அவதானித்தால் மட்டும் சிபார்சு செய்யப்பட்ட கிருமி நாசினிகளை பயன்படுத்தி கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

**நோய்த் தாக்கம்**

நோய்த் தாக்கம் குறிப்பிட்டளவில் அவதானிக்கப்படவில்லை.

**அறுவடை**

மழை வீழ்ச்சி போதாமல் இருக்கும் காலத்திலும் கிளியின் சேதம் ஏற்படும் இடங்களிலும் பச்சைப் பொத்திக்கான கிராக்கி உள்ள நேரத்திலும் பச்சைப் பொத்தியாக அறுவடை செய்தல் இலாபகரமாக இருக்கும்.

ஒரு ஹெக்ரயரிலிருந்து குறைந்தது 40000 பச்சைப் பொத்திகளை அறுவடை செய்ய முடியும். காய்ந்த பொத்தியாக அறுவடை செய்யின் 85-90 நாட்களில் பொத்திகளை அறுவடை செய்யலாம்.

**விளைவு**

2000 கி.கி/ ஹெக்ரயர்.

**வருவாய்**

1 பொத்தியின் விலை - 5.00

40000 பொத்தியின் விலை- 40000 × 5 = 200000/ (இரண்டு இலட்சம் ரூபா) எனவே விவசாயப் பெருமக்களே உங்களிடம் உள்ள எந்தவித பயிரும் செய்ய முடியாது என தரிசாக விடப்பட்ட காணிகளில் மிகவும் இலாபகரமாக மேற்குறிப்பிட்ட பயிர்களை காலபோகத்தில் மானாவாரியாக செய்கை பண்ணி எமது நாட்டின் உற்பத்தியினை அதிகரிப்பதுடன் உங்களின் வருவாயினையும் பெருக்கிக் கொள்ளுங்கள்.

**ந. செல்வநாதன்**
ஆராய்ச்சி உத்தியோகத்தர்
**சோ. விஜயதாசன்**
விவசாயப் போதனாசிரியர்
விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி

மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(முற்றும்)

# டெங்கு ஆபத்துக் குறையவில்லை எச்சரிக்கிறது சுகாதார அமைச்சு

## 12 மாவட்டங்களின் 68 வைத்தியர் பிரிவுகள் டெங்கு ஆபத்துப் பிரதேசங்களாக பிரகடனம்

**➘ டெங்கு நுளம்பு பெருகும் வாய்ப்புக்கள் உள்ள இடங்களைக் கொண்டிருந்த 367 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை**

**➘ நோயை முன்கூட்டியே இனம் கண்டு உரிய பராமரிப்பில் ஈடுபடுவதே பாதிப்பில் இருந்து விடுபடும் ஒரே வழி**

இலங்கையை மீண்டும் தாக்கத் தொடங்கியுள்ள டெங்கு நோய், இம்முறை கடந்த காலங்களைவிட அதிகளவு பாதிப்புக்களை மக்களுக்கு ஏற்படுத்தி வருகிறது.

டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு பல ஆண்டுகளாக இலங்கை வாழ் மக்களுக்கு இருந்து வருகிறது.

இம்முறை டெங்கு பரவத் தொடங்கியதும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் டெங்கு நோய் ஏற்படாமல் தவிர்க்கும் வழிமுறைகளையும் அரசாங்கம் முன்னெடுத்தபோதும் அவற்றையெல்லாம் தாண்டி டெங்கு இம்முறை அதிகளவு பேரைப் பாதித்துள்ளது.

இந்த நிலையில் இந்த நோய் பற்றித் தொடர்ந்தும் நாம் மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டியது அவசியமாகிறது.

மலேரியாக் காய்ச்சலைப் போலவே டெங்கு காய்ச்சலும் நுளம்புகள் மூலமே பரவுகிறது.

டெங்கு காய்ச்சலுக்கு உலகம் முழுவதும் ஏராளமானவர்கள் பலியாகி வருகிறார்கள்.

மனிதனின் இரத்தத்தை குடிக்கும் நுளம்புகள் டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸ் கிருமியை மனிதனின் இரத்தத்துக்குள் செலுத்தி விடுகிறது.

இந்த நுளம்புகளை ஒழிப்பது என்பது அவ்வளவு சாதாரண விடயம் அல்ல. இந்த நுளம்புகளை ஒழிக்க மருந்து தெளித்தால் கூட அந்த இரசாயன பொருளை எதிர்கொண்டு தாக்குப்பிடிக்கும் ஆற்றல் (எதிர்ப்புச்சக்தி) அந்த நுளம்புக்கு வந்து விடுகிறது.


இலங்கையில் ஈட்ஸ் இஜிப்டைஸ் மற்றும் ஈட்ஸ் அல்பொஜிக்டஸ் என்ற இரு நுளம்புகளுமே டெங்கு நோயைப் பரப்புவதில் முக்கிய காரணிகளாக இருந்தாலும் இந்நோயைப் பரப்பும் 42 விதமான நுளம்புகள் இனங்காணப்பட்டுள்ளன.

இந்த நுளம்புகளை ஒழிக்க அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் புதிய முறையை கண்டுபிடித்திருக்கிறார்கள். உல்பாச்சியா என்ற நுண் கிருமியை (பக்டீரியா) அந்த நுளம்புகளின் உடலில் செலுத்தி விடுகிறார்கள்.

அந்த பக்றீரியா செலுத்தப்பட்ட நுளம்புகள் அதிக நாள் வாழ முடியாது.

அதாவது வயதாகும் வரை அந்த நுளம்புகள் வாழ முடியாது.

அது உயிர் வாழும் காலத்தில் இனப்பெருக்கம் செய்து உற்பத்தியாகும். புதிய நுளம்புகளும் இந்த பக்டீரியா பாதித்த நுளம்புகளாகவே உருவாகி விரைவில் அழிந்து விடுகின்றன.



இதன் மூலம் விரைவில் இந்த நுளம்பினத்தையே கூண்டோடு அழித்துவிடக் கங்கணம் கட்டியிருக்கிறது அவுஸ்திரேலியா.

இலங்கையில் 1960ஆம் ஆண்டு முதன் முதலில் மேல் மாகாணத்தில் டெங்கு நோயாளிகள் இனங்காணப் பட்டனர்.

ஆனால் 2004ஆம் ஆண்டில் இந்த நோய் இலங்கையை ஆட்கொண்டபோது அது இலங்கைக்கு சவாலான ஒரு நோய் ஆகியது.

அவ்வாண்டு 15,463 டெங்கு நோயாளர்கள் இனம்காணப் பட்டதுடன் அத்துடன் 88 பேர் இதனால் உயிரிழந்தனர். வருடா வருடம் இதன் தாக்கத்தால் பல பேர் தம் உயிரை இழந்துள்ளனர்.

கடந்த வருடம் 4,680 டெங்கு நோயாளர்கள் இனங் காணப் பட்டதுடன் 16 பேர் உயிரிழந்துள்ளனர் என தேசிய தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவிக்கின்றது.

எனினும், இந்த வருடம் டெங்கு நோயின் தாக்கம் இலங்கையில் மிக அதிகரித்திருக்கிறது.

ஒரு நாளைக்கு சுமார் இருநூறு பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளானவர்களாக இனம் காணப்படும் நிலைமை ஏற்பட்டிருப்பதாக சுகாதாரப் பராமரிப்பு போஷாக்குத்துறை அமைச்சின் நோய் பரவுகைத் தடுப்பு பிரிவு மருத்துவ அதிகாரி மனோரி கீத்தாஞ்சலி தெரிவித்திருக்கிறார்.

இவ்வாண்டு டெங்கு நோயின் தாக்கம் மிக அதிகரித்திருப்பதால் இந்த நோயைப்பரப்பக்கூடிய நுளம்புகள் பெருகும் இடங்களைக் கொண்டிருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும பணிக ளும் ஜுன் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளது.

இதன் அடிப்படையில் நுளம்புகள் பெருகக் கூடிய சுற்றாடலைக் கொண்டிருக்கும் இடங்களை அடையாளம் காணும் நடவடிக்ககள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

**ஒரு நாளைக்கு சுமார் 200 பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளானவர்களாக இனங் காணப்படுவதாக சுகாதார பராமரிப்பு போசாக்குத் துறை அமைச்சின் நோய் பரவுகைத் தடுப்பு பிரிவு மருத்துவ அதிகாரி கூறுகிறார்.**

இப்பணியில் பொது சுகாதாரப் பரிசோதகர்களும், சிவில் பாதுகாப்பு குழக்களும் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர்.

கொழும்பு மாநகரசபைப் பிரதேச எல்லைக்குள் மாத்திரம் இவ்வாறான இடங்களைக் கொண்டிருந்த 367 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முன்னறிவித்தல் வழங்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் 12 மாவட்டங்களில் தற்போது இக்காய்ச்சல் தீவிர நிலையில் காணப்படுகின்றது.

அதிலும் இம் மாவட்டங்களிலுள்ள 68 மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு காய்ச்சல் அச்சுறுத்தல் அதிகரித்துள்ள பிரிவுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என்கிறார்.

சுகாதாரப் பராமரிப்பு போஷாக்குத்துறை அமைச்சின் பொது சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹீபால. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு அதிகாலை முதல் 9 மணிவரையிலும் பின்னர் மாலை 4.7 மணியளவில் கொட்டுவதோடு சூரிய உதயம் மற்றும் அஸ்தமன நேரங்களிலேயே அதிகமாக கொட்டுகின்றது.

இந்நோய் ஏற்பட்டால் 104-105 பரடைன் காய்ச்சல் காணப்படுவதோடு தலைவலி, மூட்டுவலி, வாந்தி, குமட்டல், நெறிக்கட்டு வீக்கம், தோலில் சிவப்பு மற்றும் தடித்தல் எற்பட்டு 3-4 நாட்களில் காய்ச்சல் தீர்ந்து விடும். சரமத்தின் தடிப்பும் 3-4 நாட்களில் அகன்றுவிடும்.

இந்நோய் அதிகரித்தால் மூக்கால், முரசால், சருமத்தால் இரத்தம் கசியும்.

மேலும் கண்ணுக்குக் கீழ் வலி உணவில் நாட்டமின்மை போன்றளவும் முக்கிய அறிகுறிகளாகும்.

இந்நோய் கண்டால் உடன் அதற்கு அஸ்பிரின் போன்ற மாத்திரைகளை எடுக்கக்கூடாது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் காய்ச்சலை ஓரளவு தணிக்க முடிந்தாலும் டெங்கு நோய் ஆபத்து நீங்கிவிடுவதில்லை.

எனவே முறையான வைத்தியப் பராமரிப்பே டெங்கு நோயாளருக்கு அவசியமானது.

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கரவெட்டி யார்க்கரு வித்தியாலயத்தில் 3 பேரும் துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் 4 பேரும் கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரியில் ஒரு மாணவியும் புத்தூர் சோமாஸ்கந்தா வித்தியாலயத்தில் 4 பேரும் மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயத்தில் 4 பேரும் கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தில் 18 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்களின் விபரம் வருமாறு,

**கரவெட்டியார்க் கரு வித்தியாலயம்**

ச. பிரியங்கா - 160, சி. இந்துஜா 148, வி. ரேணுகா - 147.

**துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்**

வி. தினேஷ் - 158, நா. கிரிஷாயினி - 156, சி. ஜனனியா - 147, பி. நர்த்தன சர்மா - 145.

**கரவெட்டி ஞானசிரியர் கல்லூரி**

வை. அஜித்தா - 140.

**புத்தூர் சோமாஸ்கந்தா வித்தியாலயம்**

பா. கஜனி - 156, க. திவ்யா - 156, கி. ஜிசாகரன் - 154, சி. விதுஷா - 146.

**மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்**

சி. யதுர்ஷனா - 167, அ. மதுஷன் - 140, ரா. சுமித்தா - 156, பி. தனுஜன் - 142.

**கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம்.**

சி. லக்சிகா - 168, ஆ. ஹெறனோஷன் - 166, கு. நிதுர்ஷா - 165, யோ. ரகீஷன் - 159, பு. கஜன் - 159, ஜெ. மிதுர்ஷன் - 159, சி. கம்ஷா - 158, பி. வைஷ்ணவி - 157, ரா. தர்விகன் - 157, வே. வினோத் - 157, ச. சஞ்ஜித் - 153, க. தர்ஷனா - 150, கெ. அகத்தியா - 149, இ. சோபிகா - 145, இ. விவேதனன் - 144, சி. மிதுளா - 144, சு.மதுஷன் - 143, சி. திலக்ஷனா - 140.

(ஓ)

# கந்த சஷ்டி விழா

(சாவகச்சேரி)

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய கந்த சஷ்டி விரத உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் விசேட பூசை இடம்பெற்று முருகப் பெருமான் உள்வீதியுலா வருவார். தொடர்ந்து ஆறு தினங்களும் தினமும் 10 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகும். 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சூரன் போரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருக்கல்யாணம் இடம்பெறவுள்ளதுடன் தினமும் பகல் 12.30 முதல் கந்த புராண படிப்பும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ)

# தொடர் சொற்பொழிவு

(வடமராட்சி)

கந்தசஷ்டி விரத கால விசேட தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய நிகழ்வாக சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை முதல் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் மாலை 6 மணி முதல் செஞ்சொற் செல்வன் இரா.செல்வ வடிவேல் வழங்கும் 'செஞ்சொற்புனை மாலை' எனும் தலைப்பில் தொடர் சொற் பொழிவு ஆற்றவுள்ளார்.(ஓ-3)

# மூதறிஞர் கவிஞர் வே. ஐயாத்துரை ஞாபகார்த்த கவிதை நூலுக்கான விருது

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்ட அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட மூதறிஞர் வே. ஐயாத்துரையின் ஞாபகார்த்த கவிதை நூலுக்கான விருது இம்முறை இரு கவிதை நூல்களுக்கு வழங்கப்படவுள்ளதாக யாழ். இலக்கிய வட்டத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதில் பெண்ணியாவின் "இது நதியின் நாள்" மற்றும் துவாரகனின் "மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள்" ஆகிய இரு கவிதை நூல்களுக்கே இவ்விருது வழங்கப்படவுள்ளது.

இதற்கான பரிசுத் தொகை ரூபா 10 ஆயிரம் இரு நூல்களுக்கும் பகிர்ந்தளிக்கப் படவுள்ளது.

இத்தொகையை முதறிஞர், கவிஞர் அரியாலையூர் ஐயாத்துரையின் மகனும், யாழ். இலக்கிய வட்ட உறுப்பினருமான வரதராசா வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ)

# செயலமர்வு

(அல்வாய்)

பருத்தித்துறை இலங்கை வங்கி கிளையினரின் ஏற்பாட்டில் அப் பகுதியிலுள்ள க.பொ.த சாதாரண தர வணிகக்கல்வி மாணவர்களுக்கான செயலமர்வு நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என வங்கி முகாமையாளர் திருமதி எஸ். பிரபாகரன் தெரிவித்துள்ளார். (ஓ-19)

✦ ✦ ✦ ✦ ✦

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கேத்திர கணித மென் பொருளாக்கம் தொடர்பான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ஓ-29)

# இராசி பலன்

*18.10.2009*

*(ஐப்பசி 1, ஞாயிற்றுக்கிழமை)*

*அமாவாசை முற்பகல் 11.35 மணிவரை*

*சித்திரை முன்னிரவு 10.25 மணிவரை*

*இராகுகாலம் 4.32 - 6.02 மணிவரை*

*சுபநேரம் 9.02 - 10.32 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | மனோதைரியம், குடும்ப மகிழ்ச்சி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், உடல் நலம், மனமகிழச்சி, பொருள் சேர்க்கை |
| மிதுனம் | அஜீரண ரோகம், பணக்குறைவு, மனஸ்தாபம், காரிய இடையூறு. |
| கடகம் | மனச்சஞ்சலம், மாதா சுகம், சுப செய்தி, புதிய முயற்சி. |
| சிங்கம் | அன்னியர் சந்திப்பு, ஜனவசியம், நற்கீர்த்தி, பொருள் சேர்க்கை. |
| கன்னி | அமைதிக் குறைவு, கௌரவக் குறைவு, காரியதாமதம், தனவிரயம். |
| துலாம் | தெய்வசிந்தை, போசன சுகம், உறவினர் வருகை, சயன சுகம். |
| விருச்சிகம் | பிதாசிந்தை, சயன சுகக்குறைவு, தனவிரயம், வீண் அலைச்சல். |
| தனுசு | எடுத்த காரியம் கைகூடும், பெருமையடைதல், போசன சுகம், கலந்துரையாடல். |
| மகரம் | சுபநிகழ்வு, உற்சாகம், பிறர் உதவி, முயற்சி கைகூடும். |
| கும்பம் | ஆன்றோர் சந்திப்பு, புதிய திட்டமிடல், கட்டுப்பாடு, உடல் உழைப்பு. |
| மீனம் | அச்சமான நிலை, முயற்சி தாமதம், போசன சுகம், ஆரோக்கியக்குறைவு. |

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## நீண்ட நாட்கள் வாழ ஆசை

"தன்னந்தனியாக இந்த இருட்டுப் பாதையில் நடந்து போக எனக்குப் பயமாக இருந்தது. நல்ல வேளை துணைக்கு நீங்க வந்திங்க"

"நானும் அப்படித்தான். பயந்து கொண்டே வந்தேன். துணைக்கு நீங்க கிடைத்தது என்னுடைய அதிர்ஷ்டம். பேசிக் கொண்டே போகலாம் வாங்க!"

"நீண்ட நாட்கள் உயிர் வாழ வேண்டும் என்று எனக்கு ஆசை. அதற்கு என்ன செய்யலாம் சேர்?"

"அது ஒன்றும் பெரிய காரியமில்லை. மனம்,உடம்பு இரண்டையும் எந்தளவுக்கு ஒருவன் ஆரோக்கியமாக வைத்திருக்கிறானோ அந்த அளவுக்கு அவன் நீண்ட நாட்கள் வாழ்வான்."

"நீங்கள் சொல்வதுதான் சரியான யோசனை ஆனால் அமெரிக்காவில் ஒரு இளைஞன் என்ன செய்தான் தெரியுமா?"

"தெரியாதே!"

"இறந்தவர்களின் சாம்பலை எடுத்து வந்து உணவில் கலந்து சாப்பிட்டிருக்கிறான்."

"என்ன அக்கிரமம் இது."

"ஆமாம் சேர்! நீண்டநாட்கள் உயிர்வாழ வேண்டுமானால் இறந்தவர்களின் சாம்பலை சாப்பிடு என்று யாரோ இவனிடம் சொல்லியிருக்கிறார்கள். அதை நிஜம் என்று நம்பி அதைப் போலவே செய்ய ஆரம்பித்தான்."

"அடப்பாவமே! அதற்குப் பின் என்ன ஆச்சு?"

"அமெரிக்க பொலிஸ் அவனைக் கைது செய்து வைத்திருக்கிறார்கள்."

"மனோ வியாதிக் காரனாக இருப்பானோ?"

"மூட நம்பிக்கை அவனை இந்த அளவுக்கு ஆக்கியிருக்கிறது"

"அது இருக்கட்டும் சேர்... இப்ப நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன்."

"கேளுங்க"

"உங்களுக்கு நீண்ட நாட்கள் உயிர் வாழ ஆசை உண்டா இல்லையா?"

"உண்டு"

"அப்படியானால் இப்பொழுதே உன்னிடமுள்ள பணம் முழுவதையும் மரியாதையாக என்னிடம் கொடுத்துவிடு"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 80 |
| உருளைக்கிழங்கு | 80-90 | 90-100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 |
| தக்காளி | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 100 | 120 | 100 |
| கரட் | 70 | 80 | 70 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 80 | 100 | 60 |
| வாழைக்காய் | 25 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 50-60 | 60 | 55 |
| பெரிய வெங்காயம் | 50 | 50 | 60 |
| பாகற்காய் | 120 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 80 | 50 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 40 |
| பயிற்றங்காய் | 120 | 140 | 80 |
| லீக்ஸ் | 140 | 160 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 70 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 170 | 200 | 140 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 280 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 |

# தாய்ப்பாலே தலைசிறந்த அருமருந்து

**உலக தாய்ப்பால் வாரத்தின் கோஷமாக வவுனியாவிலுள்ள மனிக்ஃபாம் செட்டிகுளம் நிவாரண முகாம்களிலும், நலன்புரி முகாம்களிலும், தங்கியுள்ள சுமார் 3 ஆயிரம் பாலூட்டும் தாய்மார்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடத்தப்பட்டது.**

தாய்ப்பால் என்பது குழந்தைகளுக்கு இயற்கை கொடுத்த அற்புதமான வரம். பாலூட்டியினத்தைச் சேர்ந்த எல்லா உயிரினங்களும் தங்கள் குழந்தைகளையும், குட்டிகளையும் பாலூட்டிப் பராமரிக்கின்றன.

மனித இனமும் இதற்கு விதிவிலக்கல்ல. தாய்ப்பாலின் முக்கியத்துவத்தையும் மகத்மீகத்தையும் ஒவ்வொரு இளம் தாய்க்கும் உணர்த்தும் வகையில் வருடந்தோறும் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் ஆகஸ்ட் ஏழாம் திகதி வரை உலக தாய்ப்பால் வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

எத்தகைய சிரமங்கள் ஏற்பட்டாலும் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தக் கூடாது என்பதை வலியுறுத்தும் வகையில் தாய்ப்பாலூட்டுவது பேரிடரிலும் இன்றியமையாதது. - நீங்கள் தாயாரா? என்பதை இந்த ஆண்டு உலக தாய்ப்பால் வாரத்தின் கோஷமாக உலக சுகாதார நிறுவனம் வரையறுத்துள்ளது.

தாய்ப்பால் வாரத்தின் கோஷமாக வவுனியாவில் உள்ள மனிக்பாம், செட்டிகுளம் நிவாரண முகாம்களிலும் நலன்புரி முகாம்களிலும், தங்கியுள்ள சுமார் 3 ஆயிரம் பாலூட்டும் தாய்மார்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

குழந்தைகளினதும், பாலூட்டும் தாய்மார்களினதும் நலன்கருதியே இந்தத் திட்டத்தை சுகாதார அமைச்சும் குடும்ப சுகாதார பணியகமும் இணைந்து நடத்தியது. சுகாதார அமைச்சின் மேலதிக பணிப்பாளர் டாக்டர் நிஹால் ஜெயதிலக்க தலைமையில் இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இன்றைய காலகட்டத்தில் - அதிலும் குறிப்பாக பணிபுரியும் தாயாக இருப்பின், தாய்ப்பாலா அல்லது புட்டிப்பாலா என்று மனதில் ஒரு பட்டிமன்றம் போட்டு முடிவெடுக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறாள்.

உலக அளவில் இந்த நிலைமையை கருத்தில் கொண்டு உலக தொழிலாளர் நிறுவனமானது வேலை நாட்களில் பாலூட்டும் தாய்மாருக்கு ஒருமுறையோ இருமுறையோ அரைமணி நேரம் பாலூட்டும் நேரமாக அங்கீகரித்துள்ளது.

### தாய்க்கும் முக்கியம்

குழந்தைக்கு தாய்ப்பால் எவ்வளவு முக்கியமோ, பாலூட்டுவது தாய்க்கும் முக்கியமானது. தாய்ப்பால் ஊட்டாத பெண்களுக்கு மார்பு மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் வரும் அபாயம் உள்ளது. பாலூட்டும் தாய் அடுத்த கர்ப்பத்தை இயற்கையாகவே தள்ளிப் போடுகிறாள். ஒருநாள் பாலூட்டுவதில் குழந்தையின் இரத்தச் சர்க்கரை அளவு கட்டுப்படுகிறது. நோயெதிர்ப்பு சக்தி கூடுகிறது. குழந்தையும் தாயும் சேர்ந்தே அளப்பரிய நன்மை பெறுகின்றனர்.

பிறந்த குழந்தைகளுக்கு திரவ உணவுகளிலேயே தலைசிறந்ததும், ஈடு இணையற்றதுமானது தாயின் பாலாகும் என்று விஞ்ஞான ரீதியாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தாய்ப்பால் அருந்தி வளரும் குழந்தைகளுக்கு பிற்காலத்தில் இரத்த நாள அடைப்பு நோய்கள் வரும் வாய்ப்புகள் குறைவாக இருப்பதாக ஆராய்ச்சிகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

தாய்ப்பாலில் நோய்க்கிருமிகள் இருப்பதில்லை. பிறவகைப் பால்களில் கிருமிகளை அகற்ற விசேட கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தாய்ப்பால் பல நோய்களுக்கும் மருந்தாகவும் இருக்கிறது என சித்த வைத்தியம் குறிப்பிடுகின்றது. தாய்மாருக்கு காச நோய், மலேரியா, மற்றும் டைபாய்டு காய்ச்சல் போன்ற நோய்கள் இருக்கும் போது குழந்தைக்கு தாய்ப்பாலூட்டலாமா? என்ற ஐயப்பாடும் ஏற்படுவதுண்டு.


இப்படியான நேரங்களில் வைத்தியருடன் கலந்துரையாடி தாய்ப்பாலைக் கொடுக்கலாம். மேலும் குழந்தைக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் சில தாய்மார் பாலூட்டுவதை நிறுத்த எத்தணிப்பர்.

இது தவிர்க்கப்பட வேண்டும். ஏனென்றால் தாய்ப்பாலில் உள்ள நோய் எதிர்க்கும் சக்தியான இம்னோ கு[illegible]பிலின் என்ற புரதச்சத்து நோ[illegible]கிருமிகளை எதிர்த்து போ[illegible]டி வயிற்றுப் போக்கை கு[illegible]ப்படுத்த பெரிதும் உதவுவதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

### எவ்வளவு காலம்?

குழந்தை பிறந்தது முதல் தொடர்ந்து 6 மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்கும் நிலையில் தண்ணீர் கூட கொடுக்கத் தேவையில்லை. தொடர்ந்து 6 மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுப்பதே சிறந்தது. புட்டிப்பாலை இயன்றவரை தவிர்க்க வேண்டும். தாய்ப்பாலுக்கு மாற்றீடாக எந்தப் பால்மாவும் கிடையாது. நாலுமாதங்கள் முதல் டாக்டர் அல்லது பிரதேச வைத்திய ஆலோசகரின் ஆலோசனைப்படி சில உணவுவகைகளை கொடுக்கலாம்.

முதன்முதலில் உலகத்தை எட்டிப் பார்க்கும் குழந்தைக்கு



தாய்ப்பாலை அன்பளிப்பாக கொடுத்தே உலகம் வரவேற்புக் கூறுகிறது. இதைவிட அந்தக் குழந்தைக்கு பிடித்தமான, பொருத்தமான, மிகவும் அவசியமான பரிசு உலகில் வேறொன்று இருக்க முடியாது.

**குழந்தை பிறந்தது முதல் தொடர்ந்து 6 மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்கும் நிலையில், தண்ணீர் கூட கொடுக்கத் தேவையில்லை.**

### மூளை விருத்தி

மனிதனின் மூளை விருத்தி தாயின் வயிற்றிலேயே முழுமை பெற்று விடுகிறது என்றுதான் பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் அதனை கூர்மைப்படுத்தும் செயற்பாடுகள் குழந்தை பிறந்த பின்பும் தொடருகின்றன. இதற்கு தாய்ப்பாலின் பங்களிப்பு இன்றியமையாதது. மூளைவிருத்திக்கு Gonadotropin releasing hormone என்னும் ஓமோன் தேவை.

தாயின் கருவறையில் தொப்புள் கொடியூடாக வழங்கப்படும் இந்த உயிர் வேதி, குழந்தை பிறந்த பின்னர் தாய்ப்பாலின் மூலம் அதற்கு தொடர்ந்து கிடைக்கிறது.

### தடைகள்

பொருளாதார காரணங்களினால் நடுத்தரமற்றும் அடித்தட்டு சமூகத்தில் பாலூட்டும் காலங்களிலும் வேலைக்கு போக பெண்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இத்தகைய பெண்களின் குழந்தைகளுக்கு தாய்ப்பாலை தேவைக்கேற்ப பருகும் வாய்ப்பு மறுக்கப்படுகிறது. முளைக்காம்பில் வேம்பின் எண்ணெய் போன்ற கசப்புக்களைத் தடவி குழந்தைகளின் பால் குடிக்கும் இயல்பூக்கம் வலுக்கட்டாயமாக மறக்கடிக்கப்படுகிறது.

கர்ப்ப காலத்தில் போதிய ஊட்டச்சத்து கிடைக்காததால் பிரசவத்தின் பின்னர் போதிய தாய்ப்பால் சுரக்க முடியாமல் திண்டாடும் தாய்மாரும் குழந்தைகளும் அதிகம் ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகளின் நிதியம் (UNICEF) வளர்முக நாடுகளில் 5 வயதுக்குட்பட்ட 12 மில்லியன் குழந்தைகள் வருடம் தோறும் செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற பரிதாபமான தகவலை வெளியிட்டுள்ளது.

இதில் பாதிப்பேர் சரிவர தாய்ப்பால் கிடைக்காததால் ஏற்படும் போசணைக் குறைகளினாலேயே மரணத்தை தழுவுகின்றனர்.

இறைவன் எமக்கருளிய வளத்தினை எமது குழந்தைகளுக்கு கொடுத்து குழந்தைகளின் உரிமைகளையும் பேண வேண்டியது தாய்மாரின் கடமையாகும். அதாவது தாய்ப்பால் ஒரு குழந்தையின் உரிமை என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அவ்வாறு மறந்து செயற்படுவது இயற்கைக்கும் எமது குழந்தைக்கும் நாம் செய்யும் துரோகமாகும்.

மனிதன் பதவியை அலங்கரிக்கிறான். பதவி மனிதனை அலங்கரிப்பதில்லை.

~ இத்தாலி

வலம்புரி

# உள்ளூராட்சிச் சேவையை மாநாடு உயர்த்தட்டும்

வடக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் இன்று 18ஆம் திகதியும் நாளை 19ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இலட்சக்கணக்கான ரூபாய் செலவில்–பல மனித மணித்தியாலங்களின் உழைப்பில் இடம் பெறும் உள்ளூராட்சி மாநாடு, உள்ளூராட்சி சேவையில் காத்திரமான முன்னேற்றத்தை தரும் என நம்பலாம்.

உள்ளூராட்சி சபைகளின் பணிகள் மேன்மை அடைவதால் மனித சமூகம் உயர்வடைகின்றது.

அழகான நகரங்களும் அழகான கிராமங்களும் உள்ளூராட்சி சபைகளின் அர்ப்பணிப்பான சேவையால் கிடைப்பன.

அதேநேரம் உள்ளூராட்சி சபைக்களுக்கான மக்களின் ஒத்துழைப்பென்பது இங்கு அவசியமும் அத்திபாரமுமாக காணப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைகளும் மக்கள் இணைந்து செயற்படுவதன் மூலமே அழகானதும் தூய்மையானதுமான நகரங்களும், கிராமங்களும் படைக்கப்படுகின்றன.

எனவே யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் உள்ளூராட்சி மாநாடு, உள்ளூராட்சி சபையின் உட்பிரிவுகளான மாநகரசபை, நகரசபை, பட்டின சபை, கிராமசபை என்பவற்றுக்கும் அந்தந்த வகுதிக்குட்பட்ட வரியிறுப்பாளர்களாகிய பொதுமக்களுக்கு இடையே அன்னியோன்னியமான நல்லுறவை கட்டியெழுப்புவதற்கு வழி சமைக்க வேண்டும்.

கடந்தகால உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்களும் பொதுமக்களும் முரண்படும் கலாசாரம் இருந்தமை துரதிர்ஷ்டமானது.

இதனால் உள்ளூராட்சி சபைகள் தங்கள் இலக்கை அடைய முடியாமல் போயிற்று. இதற்கு தவறான கருத்தேற்றமே காரணமெனலாம்.

உள்ளூராட்சி சபைகளின் பணிகளை தெளிவாக விளங்கிக் கொள்ளாத பொதுமக்கள் வீதிகளில் குப்பைகளை கொட்டுவதிலும் கழிவுகளை வெளியில் வீசுவதையும் நியாயமாகக் கருதினர்.

வளர்ப்பு நாய்கள் இறந்தால் அதனை புதைக்கும் கடமை தங்களுடையதென்பதை மறந்தனர்.

இத்தகைய விளக்கமற்ற தன்மை பொது மக்களை இன்றுவரை தவறான பாதையில் வழி நடத்திச் செல்கின்றது.

எனவே பொதுமக்களும் உள்ளூராட்சி சபைகளும் இணைந்து சேவையாற்றும் வழிப்படுத்தல் அவசியமாகின்றது.

இதற்கு யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் உள்ளூராட்சி மாநாடு உதவ வேண்டும்.

அதேநேரம் மக்கள் சமூகத்தின் தேவைகளை உடனடியாகவும், விரைவாகவும் செய்து முடிப்பதில் மாநகர சபைகளும், பிரதேச சபைகளும் எதிர் நோக்கும் வளப்பற்றாகுறைகளையும் நிவர்த்தி செய்வது கட்டாய தேவையாகும்.

# வசிட்ட மாமுனியாய்த் திகழ்ந்த சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள்

**சிவஸ்ரீ முத்துக் குருக்கள் பரமசாமி குருக்கள் அவர்கள் நேற்று முன்தினம் இறையடி சேர்ந்தார். அவரின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும். அவருக்கு ஆத்மார்த்த அஞ்சலி செலுத்தும் வகையில் இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

ஆலயக் கிரியை முறைகளிற்கான ஆகம விதிமுறைகளில் மிகச் சிறந்த அறிவையும் அவற்றை நிறைவேற்றுவதில் பிரமிக்கத்தக்க பேராற்றலையும் கொண்டவராக எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தவர் 'அந்தனோத்தமர்' சிவஸ்ரீ வை. மு. பரமசாமி குருக்கள்.

மகாகும்பாபிஷேகம், சங்காபிஷேகம், மஹோற்சவம், பிரதிஷ்டை போன்ற கிரியைகளில் குருமணி அவர்கள் பிரதம சிவாச்சாரியாராக அமையும் போது குருத்துவப் பேற்றின் மிக உச்சநிலையை அடைந்தார். அதன் மூலம் அடியார்களின் கண்களுக்கு கும்பத்தையும், தம்பத்தையும், விம்பத்தையும் காட்டிய அதேநேரம் அவர்களின் மனங்களைத் தெய்வீக உணர்விலும், பக்தியிலும் திளைக்கச் செய்தார். மனதில் சாந்தியையும் அமைதியையும் ஏற்படுத்தினார்.

ஒரு பொழுதல்ல. முப்பொழுதும் திருமேனி தீண்டிய, அறிவிற் சிறந்த, சிவநெறியில் பொலிந்த வேதாகம விற்பனராக விளங்கிய அந்தச் சீலரின் சிறப்பை எடுத்துரைப்பது எளிதன்று. நயினை அம்பிகையின் கொடியேறும் அந்தக் கணத்தில் தம்பத்திற்குத் தீபத்தைக் காட்டிய பின், அத்தீபத்துடன் கருவறை சென்று, அம்பிகைக்குத் தீபம் காட்டி திரும்ப வந்து தம்பம் முன் அட்டாங்க நமஸ்காரம் செய்து எழும்போது அவரது தோற்றமும் பாவனையும் அம்பிகையே அவரில் ஆரோகணித்திருப்பதைப் பார்ப்போர் மனங்களில் உணர்த்தும்.

இந்தப் பக்திப் பரவசத்தில் திளைப்பதற்கென்றே பல்லாயிரக்கணக்கான அடியார்கள் ஆண்டுதோறும் நயினை கொடியேற்ற உற்சவத்திற்கு வருகை தருவதாக அவர்கள் கூறியதைக் கேட்டு நாம் அறிந்துள்ளோம். இறுதியாக 1998 ஆம் ஆண்டு சித்திரை முதலாம் நாளன்று நடைபெற்ற திருக்குட




முழுக்குப் பெருஞ்சாந்தியின் போது பிரதான யாகசாலையில் கடஸ் தாபனம் நிகழ்ந்த தினத்தில் இருந்து கும்பாபிஷேக தினத்தன்று பிரதான கும்பம் தூக்கும்வரை நீரை, உணவை, உணர்வுகளை ஒறுத்து, பார்த்தல், கேட்டல், சுவைத்தல், நுகர்தல், பரீட்சித்தல் ஆகிய ஐந்து புல உணர்விலும் அம்பிகையையே கண்டு (ஐந்து பேரறிவும் கண்களேயாக) யாகசாலையை விட்டு வெளி வராமல் கிரியைகளை நடத்திய பாங்கு பார்த்தவர்கள், கேட்டவர்களை எல்லாம் பிரமிக்க வைத்தது.

உருவத்தில் அகத்திய மாமுனி போலவும் வேதாகம விற்பனத்தில் வியாச மாமுனி போலவும் கிரியை முறைகளில் வசிட்ட மாமுனிகள் போன்றும் திகழ்ந்த நயினையின் சீர்பெறு குருமணி அவர்கள் மறைந்து விட்டார்கள்.

இது ஈழத்தின் சைவ உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. அவரது நீண்ட கால வாழ்வில் அவர் ஆற்றிய தெய்வப்பணி ஆயிரக்கணக்கான மக்கள் மனங்களில் தெய்வீக ஒளியைக் காட்டியது என்பதை எவருமே மறுக்க மாட்டார்கள். இந்த மக்களின் மனங்களில் அவர் இன்னும் பல்லாண்டு காலம் சிரஞ்சீவியாக வாழ்வார்.

**மு. நா. நடராசா**
முன்னாள் பொருளாளர்
நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம்



மருத்துவ கலாநிதி வெ.நாகநாதன்

## நாட்டை பிளவுபடுத்தும் சூழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது

### கோதபாய ராஜபக்ஷ

நாட்டை பிளவுபடுத்தும் சூழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சுற்றாடல் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவினால் எழுதப்பட்ட சார்ஜ் ஒப் தலயன் பிரிகேட் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு தரப்பினர் நாட்டுக்கு ஆற்றிய சேவைகளை அரசாங்கம் மறந்து விட்டதாக சிலர் மேற்கொண்டு வரும் பிரச்சாரங்கள் ஏற்புடையதல்ல என அவர் தெரிவித்துள்ளார். படைவீரர்களை அரசாங்கம் உதாசீனம் செய்வதாக தெரிவித்து அதன் மூலம் குறுகிய அரசியல் இலாபங்களை ஈட்டிக் கொள்ள சில சக்திகள் முனைப்பு காட்டி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இவ்வாறான சூழ்ச்சித் திட்டங்களுக்கு இடமளிக்கப்படக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலேயே ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளுக்கு தூதுவர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ–4)

# பதவியா? பணிவிடையா?

இந்த உலகத்திலே அழிந்தவர்கள் எல்லாம் பதவிச் சண்டையிலே அதே வேளையில் இந்த உலகத்தில் உயர்ந்தவர்கள் எல்லாம் பணிவிடை புரிந்ததில்லை.

ஆம். பேரரசர்களும், பேரரசுகளும் அழிந்தது அரச பதவிகளுக்காகவும் பிற அரசைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசையினாலுமே. ஆனால் புத்தர் உயர்ந்ததும், மகாத்மா உயர்ந்ததும் ஆசையை அழித்து பிறர் சேவை புரிந்ததாலே. இதனால் இவர்கள் இம்மண்ணின் மகான்கள் என்றும் மகாத்மாக்கள் என்றும் ஞானிகள் என்றும் போற்றப்படுகின்றார்கள்.


## பரமபிதா காட்டிய பாதை

இவர்களிலெல்லாம் உயர்ந்த மகான், மாமனிதர் இயேசு கிறிஸ்துவே. காரணம், இந்த உலகம் உய்வதற்காக, மானிட மக்கள் மீட்புப் பெறுவதற்காக அடிமையின் தன்மைக் கொண்டு, தன் சீடர்களின் பாதங்களைக் கழுவி, உலகம் அனைத்திற்காகவும் உயிரைக் கொடுத்தார்.

ஆனால், இதில் வேடிக்கை என்னவென்றால், இப்படிப்பட்ட மகான் இயேசுவின் சீடர்கள், இதைப் புரிந்து கொள்ளாமல் பதவிக்காக போட்டி போட்டதுதான்.

காரணம். இயேசுவுக்கும் அவருடைய சீடர்களுக்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடு பதவியா? பணிவிடையா? இந்தக் கருத்து மோதலிலே இயேசு முதலில் தோற்பவராகக் காணப்படுகின்றார். காரணம் எத்தனையோ முறை அவர்களுக்கு அறிவுரை சொன்னார்.

அதாவது பதவிகள் என்பது கேவலமா? அதை ஏற்கக் கூடாதா? இல்லை. பதவிகள் என்பது அதிகாரம் செலுத்தவோ ஆட்டிப்படைக்கவோ அல்ல மாறாக அன்பினால் அனைவருக்கும் பணிவிடை புரிய. இந்தப் பணிவிடை புரிவதென்பது பலனையோ, கூலியையோ எதிர்பார்த்ததல்ல. லஞ்சமோ, பதவி உயர்வோ எதிர்பார்த்ததல்ல. மாறாக அன்புப் பணிபுரிவது.



வாழ்வில் வெற்றி பெற்றவனாக கருதப்படுவதை விட தொண்டு செய்தவனாகக் கருதப்படுவதே மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் என்று ஆல்பர்ட் ஜன்ஸ்டின் கூறுகிறார்.

ஆம். பதவி சுகத்தைவிட பணிவிடைத்துன்பமே இதமானது, இறைவனுக்கேற்றது. அடுத்தவரின் துன்பத்தைக் கண்டும் முன்வராத மனங்களுக்கு அன்பியம் ஒரு கேடா? அன்பியங்கள் எதற்கு? பதவிக்கா? அல்லது பணிவிடைப் புரிவதற்கா?

இறையாட்சிப் பணிபுரிய தன் பட்டம், பதவி அனைத்தையும் தூக்கி எறிந்தவர் புனித பிரான்சிஸ்கு சவேரியார். நாம் எப்படி? பதவிமோகமா? பணிவிடைத் தாகமா?

**ஜோன் றொபேர்ட்**

# வன்னியில் சிங்கள குடியேற்றமே இலங்கை அரசின் திட்டம்!

போரினால் தங்கள் வாழ் விடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்துவதற்கு முன்னர் அவர்கள் வாழ்ந்த இடங்களில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்ற வேண்டியுள்ளது என்று தொடர்ந்து இலங்கை அரசு கூறி வருகிறது.

கொழும்பில் கடந்த வியாழக் கிழமை நடந்த ஒருவிழாவில் கலந்து கொண்டு பேசிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொது மக்கள் வசித்த பகுதியெங்கும் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுவது உண்மையானால் அந்தப் பகுதிகளையெல்லாம் கடந்து சென்றுதானே அந்த மக்கள் புலிகளுடன் சென்று கடைசியாக தஞ்சமடைந்த முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் வரை சென்றீர்கள்? அப்பொழுதெல்லாம் அந்தக் கண்ணி வெடிகள் ஏன் வெடிக்கவில்லை?

இறுதிக்கட்டமாக போர் நடந்த போ து பாதுகாப்பு வளையப் பகுதி



களிலும் அவர்கள் தொழில் செய்து வந்த இடங்களிலும் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் அவைகளை அகற்றிய பின்னர் மீள் குடியமர்த்தம் சாத்தியமாகும் என்றும் அதற்கு உரிய கால அவகாசம் தேவை என்றும் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்தப் பேச்சை படிக்கும் எவரும் அவர் கூறுவது அனைத்தும் உண்மைதானோ என்று நம்பி விடக்கூடும் .

போரினால் இடம்பெயர்ந்த 3 இலட்சம் தமிழ் மக்களை முள்வேலி முகாம்களுக்குள் அடைத்து வைத்து ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டுமே உணவு தந்து ஒருவருக்கு ஒரு நாளைக்கு 5 லீற்றர் குடிநீர் மட்டுமே கொடுத்து போதுமான கழிப்பறை வசதி கூட செய்து அதற்குக் கூட அவர்கள் வரிசையில் நிற்க வைத்து கடந்த 5 மாதங்களாக வதைப்பட்டுவரும் நிலையில் ஜனாதிபதி பேச்சு இது என்பதைப் புரிந்து கொண்டால் இவர் கூறுவது உண்மையா பொய்யா என்பதில் எந்தச் சந்தேகமும் எழாது.

இந்தக் கண்ணி வெடிக் கதையை போர் முடிந்துவிட்டதாக இராணுவம் அறிவித்த நாள் முதல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச சமூகத்திற்குக் கூறி வருகிறார். தமிழர்களும் எம் மக்கள் அல்லவா? அவர்களின் உயிருக்கு நான்தானே பொறுப் பேற்க வேண்டும் என்று மிகுந்த கரிசனத்துடன் முழங்கிய அவர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளில் மீண்டும் அவர்களை குடியேற்றுவது இல்லை என்ற இரகசியதிட்டத்தை நிறை வேற்றுவதில் கவனம் செலுத்தி வருகிறார்.

இவருடைய கண்ணி வெடிக் கதையை மறுப்பவர்கள் எழுப்பும் கேள்விகள் இது தான்.

போரினால் இடம் பெயர்ந்து தமிழர்கள் வாழ்ந்த தொழில் செய்த பூமி

யில் இருந்து வெளியேறிய மக்களை நடக்க வைத்துத்தானே இந்த முகாம் களுக்கு கூட்டி வந்தீர்கள். அப்போதும் கண்ணி வெடிகள் வெடிக்கவில் , லையா? பாதுகாப்பு வளைப் பகுதியில் இருந்து முகாம்களுக்கு அழைத்து வரும் வரை கண்ணி வெடி வெடித்து உயிரிழந்தார்கள் என்று எந்தச் செய்தியையும் படைத்தரப்பு கூறவில் லையே? அப்பொழுதெல்லாம் வெடிக்காத கண்ணி வெடிகள் இதற்கு மேல் வெடிக்குமா ?

சர்வதேச சமூகமும் மனித உரிமை அமைப்புகளும் எழுப்பும் இந்தக் கேள் விகளுக்கு இதுவரை இலங்கை அரசு பதில் சொல்லவில்லை.கண்ணி வெடிகளை அகற்ற தாங்கள் உத விட, தயார் என்று மேற்கத்திய நாடுகள் முன்வந்ததையும் இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

இலங்கை அரசு சொல்லும் இந்தக் கண்ணி வெடிக்கதையை ஏற்றுக் கொண்டு ஆமாம் போடும் ஒரே நாடு இந்தியா மட்டுமே ! உலகின் மற்ற நாடுகள் எதுவும் இந்தக் கதையை ஏற்றுக்கொள்ளவில்லை .

இந்த மாத ஆரம்பத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகளுக்கானதுணைக்குழுவிற்கு வன்னி முகாம்களில் அடைக்கப்பட் டுள்ள மக்களின் நிலை குறித்து அறிக்கை ஒன்றை தாக்கல் செய்த சர்வதேச சிக்கல் ஆய்வுக் குழுவின் இயக்குனர் ஆண்ட்ரூ ஸ்ட்ரோலிக் முகாம்களில் உள்ள மக்களை மீள் குடியமர்த்துவதற்கு கண்ணி வெடிகள் இருப்பதே காரணம் என்று இலங்கை அரசு கூறியதை நான் சென்ஸ் என்று வர்ணித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்த , வாழும் பகுதிகள் ஏராளமாக உள் ளன. அங்கெல்லாம் முகாமில் உள்ள மக்களுக்கு உறவினர்களாக உள்ளவர்கள்

வசித்து வருகின்றனர் . போர் நடந்த பகுதியில் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்பதை ஒரு வாதத்திற்கு ஏற்றுக்கொண்டாலும் தமிழர்கள் வாழும் மற்ற நகரங்களில் வாழும் அவர்களின் உறவினர்களிடம் அவர்களை அனுப்பி வைக்கலாமே? என்று ஆண்ட்ரூ ஸ்ட்ரோலிக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இப்படிப்பட்ட கேள்விகளுக்கு இது வரை இலங்கை அரசு பதிலளிக்க வில்லை என்பதிலிருந்தே அது பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறது என்ற உண்மை புலனாகிறது.

எனவே தமிழர்களின் உயிரோ அல்லது அவர்களை மீள குடியமர்த்தம் செய்வதோ அல்லது அவர்களைகௌரவமாக நடத்தக்கூடிய ஒரு அரசி யல் தீர்வோ இலங்கை அரசின் நோக்கமல்ல. முகாமில் அடைபட்டுள்ள மக்கள் வாழ்ந்த அவர்களின் பாரம்பரிய பூமி சிங்களவர்களை குடியேற்றி அதன் மூலம் ஈழத்தமிழர்களின் தாயகம் என்ற ஒன்று இல்லாமல் செய்ய வேண்டும் என்பதே சிங்களப் பௌத்த பேரினவாத அரசின் சிங்கள அரசியல் கட்சிகள் அனைத்தினுடைய வேறுபாடற்ற நோக்கமாகும் . இதனை ஆதரிக்கிறது இந்தியா .

ஈழத்தமிழர்கள் வாழ்ந்து வரும் பாரம்பரிய பூமியில் அவர்களை ஒரு தனித்த மொழியினமாக வாழ அனுமதிப்பது தனி ஈழ நாட்டின் அமைவை நோக்கியே கொண்டு செல்லும். அப்பகுதியின் தமிழின தனித்துவத்தை மாற்றிவிட்டால் அவர்களின் ஈழ விடுதலைக் கனவை சிதைத்துவிடலாம் என்பது இவர்களின் திட்டம்.

இதனை நாம் கற்பனையிலிருந்து சொல்லவில்லை. தமிழர்களின் பாரம்

பகுதியில் தான் கடந்த இரண்டரை ஆண்டுகளாக நடந்தபோரை வலிந்து ஆரம் பித்தது இலங்கை அரசு என்பது குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமல்ல விடுதலைப் புலிகளின் தலைமையகம் இயங்கி வந்த கிளிநொச்சியிலும் முல்லைத் தீவுப் பகுதியிலும் இலங்கை இராணுவத்தின் உயர் பாதுகாப்பு மண்டலங்களை (High Security Zone) ஏற்படுத்தி இலங்கை இராணுவப்படைகளை நிரந்தரமாக நிறுத்தி வைக்க முடிபு செய்துள்ளது.

இதற்கான முயற்சிகளில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்புடன் எப்படி யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயர்பாது காப்பு மண்டலத்தை உருவாக்கி பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரை நிரந்தரமாக நிலை நிறுத்தியுள்ளதோ அதேபோன்று தமிழர்களின் பூர்வீக பூமி முழுமையிலும் இராணுவத்தை நிலை நிறுத்தி தனது மேலாதிக்கத்தை நிலை நிறுத்த இலங்கை அரசு முயன்று வருகிறது. அதற்காகத் தான் இராணுவப் பலத்தைப் பெருக்க வேண்டும் என் கிறார் இராணுவத் தளபதி.

இதற்கான கட்டமைப்புப் பணிகளை சர்வதேச சமூகம் கண்டு விடக் கூடாது என்பதற்காகத்தான்

அங்கெல் லாம் கண்ணி வெடிகள் புதைக்கப்பட் டுள்ளதாகவும் அவற்றை அகற்றும் பணி நடைபெற்று வருவதாகவும் இலங்கை அரசு பொய்யுரைத்துக் கொண்டிருக் கிறது.

வன்னி முகாமில் உள்ள இரண்டரை இலட்சம் மக்களை அது விடுவிக் கப்போகிறதா என்ற கேள்விக்கு பதில் வன்னி முகாம்களில் இருந்து வெளியேற்றப்பட்டு மற்ற இடங்களில்



பரிய பூமியில் சிங்களவர்கள் குடியேறுவதில் (குடியேற்றுவதில்) எந்தத் தவறும் இல்லை என்று போர் முடிந்த உடனேயே ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் அவருடைய சகோதரருமான பசில் ராஜபக்ஷ கூறினார். இப்பொழுதும் அதை வலியுறுத்தி வருகிறார்.

தமிழர்கள் வாழ்ந்து வந்த மணலாறு பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை செய்யும் முனைப்பில் இலங்கை அரசு நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. அப்பகுதியின் பேரை மாற்றவும் முடிவெடுத் துள்ளது. இந்த மணலாற்றுப்

உள்ள முகாம்களில் கொண்டு சென்று அடைப் பார்கள் என்பதே .

இது தான் இனியும் நடக்கப்போகிறது. உலக நாடுகளும் ஐ.நா விழித்தெழுந்து அம்மக்களை அவர்கள் வாழ்ந்த இடங்களில் சென்று குடியேற அரசு அனுமதிக்க வேண்டும் என்று அழுத்தம் தர வேண்டும். அவ்வாறு நடக்காவிட்டால் ஆண்ட்ரூ ஸ்ட்ரோலிக் பரிந்துரைத்தது போல இலங்கை அரசிற்கு அளிக்க ஒப்புக்கொண்டுள்ள ஐ.எம்.எஃப் கடனின் அடுத்த தவணையை நிறுத்தி வைக்க வேண்டும்.

**தமிழகத்தில் இருந்து தமிழன்**

# திரு திரு துறு துறு




## திரை விமர்சனம்

எதையும் விளையாட்டுத்தனமாக செய்துவிட்டு வம்பில் மாட்டிக் கொண்டு திரு திரு... என்று முழிக்கும் ஹீரோவும் ஒவ்வொன்றையும் திட்டமிட்டு துறு துறு ... என்று செய்து ஜெயிக்கும் ஹீரோயினும் ஒரு விளம்பர கம்பனியில் ஒன்றாக வேலை செய்கின்றனர். கம்பனியை தூக்கி நிறுத்த வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படும் இருவரும் கொள்ளும் ஊடலும் கூடலும்... அதனால் வரும் காதலும்தான் திரு திரு துறு துறு!

திரு திரு நாயகர் அஜ்மல் . துறு துறு நாயகி புதுமுகம் ரூபா. விளம்பர நிறுவனம் நடத்துகிறார் மவுலி. அஜ்மலை மகனாக நினைக்கும் மவுலியின் கம்பனியை தூக்கி நிறுத்தும் கட்டாய பொறுப்பு அஜ்மலுக்கு. தங்கள் நிறுவனம் தயாரிக்கும் விளம்பர படம் ஒன்றிற்கு ஒரு குழந்தை தேவைப்பட அதை கடைசி நேரத்தில் தேடிப் பிடிக்கிறார். ஆனால் அக்குழந்தை அதன் பெற்றோரிடம் இருந்து கடத்தப்பட்டுள்ள குழந்தை எனும் உண்மை தெரிந்ததும் அதை அந்த விளம்பர படத்தில் அசட்டையாக நடிக்க வைக்கும் அஜ்மலுக்கு ஏகப்பட்ட நெருக்கடிகள். விளம்பர ஒப்பந்தத்திற்கு குழந்தையின் பெற்றோர் கையெழுத்து மற்றும் குழந்தையை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய கட்டாயம், திருடப்பட்ட குழந்தை என்பதை முதலாளி மவுலியிடம் மறைப்பது, அந்த விளம்பரம்தான் கம்பெனியை காப்பாற்ற வேண்டிய சூழல் என்பன போன்ற இன்னும் பல் சிக்கல்களுக்கு எல்லாம் தோளோடு தோள் நின்று அஜ்மலுக்கு உதவி செய்கிறார் ஹீரோயின் ரூபா. இதுதான் திரு திரு துறு துறு படத்தின் மொத்தக் கதையும் ! இதனூடே அஜ்மல் –ரூபாவின் நட்பு காதலாவதையும் மவுலியின் மறதி காமெடிகளையும் குழந்தைக்காக துரத்தும் வில்லன்களின் அக்ஷனையும் கலந்து கட்டி படத்தை ஜனரஞ்சகமாக தர முயன்றிருக்கிறார் பெண் இயக்குனர் ஜே.நந்தினி! அதில் பாதி வெற்றி ..; பாதி தோல்வி ...!

திரு திரு அஜ்மல் பாத்திரத்திற்கு ஏற்ற விறு விறு..! முந்தைய படங்களைக் காட்டிலும் இதில் நடிப்பில் நிறையவே ஸ்கோர் செய்திருக்கிறார்.

துரு துரு ரூபா இப்போது தானே எண்ட்ரி ஆகியிருக்கிறேன். சற்றே பொறு... பொறு... என்று குடும்பப் பாங்கிற்கும் கவர்ச்சிக்கும் இடையில் முடிவெடுக்க முடியாமல் தடுமாறி இருப்பதாக தோன்றுகிறது. ஆனாலும் அவரின் இளமை... இனிமை!

வழக்கம் போலவே மவுலி உதடு பிரியாமல் ஜோக் சொல்லி நம்மையும் வாய்விட்டு சிரிக்க வைக்கிறார். அவரது பெயர் மறதியும் மனைவியிடம் இப்ப கூட சைக்கிள் ஓட்ட நான் ரெடி...! என்று பேசும் யதார்த்தமும் மகிழ்ச்சி நெகிழ்ச்சி ஆகியவற்றுக்கு சின்ன சாம்பிள்! மணிசர்மாவின் இசையும் சுதிரின் ஒளஸ்ரீப்பதிவும் பெண் இயக்குனர் நந்தினிக்கும் பெரிய பலம்.


## கன்னடப் படவுலகம் போகும் நயன்தாரா:



மலையாள படவுலகில் அறிமுகமான போது 60 ஆயிரம் கூட சம்பளம் வாங்காத நயன்தாரா தமிழிலும் தெலுங்கிலும் கொடிகட்டி பறந்து ஒரு கோடிக்குமேல் சம்பளம் வாங்கினார். இப்போதுமலையாளம், தமிழ், தெலுங்கு, மொழிகளைத் தொடர்ந்து கன்னடத்திற்கு போயிருக்கும்அம்மணிக்கு 60 இலட்சம் சம்பளமாம். ரொம்பவும் சிறிய பட உலகமான கன்னட பட உலகில் இத்தனை சம்பளம் நய னுக்கு தரக்காரணம் கன்னடரான பிரவு தேவாவின் காதலி நயன் எனும் கிரேஸ்தான் என்பதை சொல்லவும் வேண்டுமா?

## அசல் அஜித்துக்கு சுரேஷ் வில்லன்

எண்பதுகளில் சாக்லேட் போய் நாயகனாக இருந்த சுரேஷ் இப்போது தனது செக்கன்ட் இனிங்சை வில்லன் அவதாரத்தில் தொடங்கி யிருக்கிறார். சிவாஜி புரொடக்சன்ஸ் சார்பில் எடுக்கப்பட்டு வரும் அசல் படத்தில் அஜித்திற்கு வில்லனாக நடிக்கிறார் சுரேஷ். வில்லன் என்றால் மொட்டைத் தலையுடன் வில்லத் தனமான சிரிப்புடன் போட்டோக்களுக்கு போஸ் கொடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்பியிருக்கிறார் சுரேஷ். தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் 200க்கும் அதிகமான படங்களில் நடித்திருக்கும் சுரேஸ் புத்துணர்ச் சியுடன் வில்லன் வேடம்போட்டிருப்பதாக கூறுகிறார். மறுபடியும் தமிழ் சினிமாவில் ஒரு ரவுண்ட் வர வேண்டும் என்பதே அவரது விருப்பமாம்.



## 5 வில்லன்கள் நடிக்கும் ‘மாற்றிக்காட்டுவோம்’

புதுமுகங்கள் நடிக்க, மாற்றிக்காட்டுவோம் என்ற பெயரில் ஒரு புதிய படம் தயாராகி இருக்கிறது.


கடத்தல், பிரிவினைவாதம், தீவிரவாதம், சமநிலைஅடையாத அரசியல் ஆகியவற்றில் இருந்து இளைஞர்கள் விடுதலை அடைந்து நேரான பாதையில் தங்கள் வாழ்வாதாரத்தை அமைத்துக் கொண்டு நாட்டை வல்லரசு நிலைக்கு உரு வாக்க பாடுபடவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் படம் இது.

படத்தில் 4 கதாநாயகன்கள் 4கதாநாயகிகள் 5வில்லன்கள் என அத்தனை பேரும் புதுமுக ங்கள். தமிழ்நாட்டின் பல மாவட்டங் களில் இருந்தும் 125-க்கும் மேற்பட்டோர் படத்தில் நடித்து இருக்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமனின் மகள் பத்மா வெங்கட் ராமனும் இளைஞர் விழிப்புணர்வு ஆர்வலர் சூசைராஜும் முக்கிய வேடங்களில் தோன்றுகிறார்கள்.கதை-திரைக்கதை-வசனம்-பாடல் கள்-எடிட்டிங்-டைரக்ஷன் : அ.ஹாளிது. செய்யாங்குப்பம் சினி ஆர்ட்ஸ், மார்ட்டின் கம்பைன்ஸ் சார்பில் சமீமா பேகம் பிலோமினா ஆகியோர் இருவரும் படத்தை தயாரிக்கிறார்கள். படப்பிடிப்பு சென்னை கிழக்கு கடற்கரைசாலை, பழவேற்காடு, ஊட்டி ஆகிய இடங்களில் நடை பெற்றது.

## நயன்தாராவை திருமணம் செய்யவில்லை

### பிரபுதேவா மனம் திறக்கிறார்



நயன்தாரா-பிரபுதேவா காதல் தீவிரமாகியுள்ளது. இரு வரும் ரகசியமாக சந்திக்கின்றனர். சமீபத்தில் சென்னையில் நடந்த சினிமா தொழிலாளர்கள் விழாவுக்கு நயன்தாரா வந்த போது நட்சத்திர ஹோட்டலில் தங்கி னார். அப்போது பிரபுதேவா தனது குழந்தையை அழைத்து போய் நயன்தாராவை பார்த்தார்.

பின்னர் குழந்தையுடன் நயன்தாரா ஷொப்பிங் போனதாக தகவல் வெளியானது. இந்த விடயங்கள் பிரபுதேவா மனைவி ரம்லத்துக்கு தெரிய ஆவேச மாகியுள்ளார். ஏற்கனவே நயன்தாராவும் பிரபுதேவாவும் ரகசிய திருமணம் செய்து கொண்டதாகவும் செய்திகள் வெளிவந்தன. அதற்கு இதுவரை எந்த பதிலும் சொல்லாமல் பிரபுதேவா இருந்தார். இப்போது முதல் தடவையாக வாய் திறந்துள்ளார். அவர் கூறியதாவது,

எனக்கும் நயன்தாராவுக்கும் திருமணம் நடக்கவில்லை. நயன்தாரா கையில் எனது பெயரை பச்சை குத்தி இருப்பது உண்மை மயா என்று என்னிடம் கேட்கப்படுகிறது. இந்த கேள்விக்கான பதில் ஒரு குழந்தைக்கே தெரியும். நானும் நயன்தாராவும் பொது விழாக்களில் சேர்ந்து பங்கே ற்பதற்கு பயப்படவில்லை.

ஸ்ரீதேவியும் பிரியாமணியும் எனக்கு பிடித்த நடிகைகள். அடுத்த படம் பற்றி இன்னும் முடிபு செய்யவில்லை. அரசியலுக்கு வரமாட்டேன். நடிப்பு, இயக்கம், நடனம் மூன்றிலும் நடனத்தைத்தான் ரொம்ப விரும்புகிறேன். சல்மான்கான், விஜய், இருவரில் விஜய்தான் சிறப்பாக நடனமாடுகிறார். தமிழ்த்திரையுலகில் விஜய், சிம்பு, தனுஷ், ஜெயம்ரவி நால்வரும் நன்றாக நடனம் ஆடக்கூடிய வர்கள். இவ்வாறு பிரபுதேவா கூறினார்.

## திருக்கணித பஞ்சாங்கப்படி சஷ்டி விரதம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கந்தசஷ்டி விரதம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிப்பதாக திருக்கணித பஞ்சாங்கத்தின் கணிப்பாசிரியர் சிவஸ்ரீ சிதம்பர நாதக் குருக்கள் அறிவித்துள்ளார்.

கந்தசஷ்டி விரதம் இன்று ஆரம்பித்து எதிர்வரும் 23 ஆம் திகதி சூரன் போரும் 24 ஆம் திகதி திருக்கல்யாணமும் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் இந்தக் கணிப்பீட்டின்படியே கந்தசஷ்டி விரதத்தை அனுஷ்டிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)


வாடிக்கையாளர்களுக்கு எமது தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
தீபாவளி சிறப்பு விலைக்கழிவு

| | |
|---|---|
| 1.6 GHz Processor<br>Intel Atom Mother Board<br>1GB DDR-2<br>160 GB Hard Disk<br>ATX Casing<br>Key Board<br>Optical Mouse<br>16"LCD<br>DVD Writer<br>MS-01 37000/= | 1.6 GHz Processor<br>Intel Atom Mother Board<br>1GB DDR-2<br>160 GB Hard Disk<br>ATX Casing<br>Key Board<br>Optical Mouse<br>16"LCD<br>DVD Writer<br>UPS<br>MS-02 41000/= |
| 2.6 GHz Processor (Dual Core)<br>ASUS Mother Board(G31)<br>1GB DDR-2<br>160 GB Hard Disk<br>ATX Casing<br>Key Board<br>Optical Mouse<br>16"LCD<br>DVD Writer<br>MS-03 44000/= | 2.6 GHz Processor (Dual Core)<br>ASUS Mother Board(G31)<br>1GB DDR-2<br>160 GB Hard Disk<br>ATX Casing<br>Key Board<br>Optical Mouse<br>16"LCD<br>DVD Writer<br>UPS<br>MS-04 48000/= |
| 2.6 GHz Processor (Dual Core)<br>ASUS Mother Board(G31)<br>1GB DDR-2<br>320GB Hard Disk<br>ATX Casing<br>Key Board<br>Optical Mouse<br>19"LCD<br>DVD Writer<br>UPS<br>MS-05 51000/= | 2.6 GHz Processor (Dual Core)<br>ASUS Mother Board(G31)<br>2GB DDR-2<br>500GB Hard Disk<br>ATX Casing<br>Key Board<br>Optical Mouse<br>19"LCD<br>DVD Writer<br>UPS<br>MS-06 53000/= |
| 2.93 GHz Processor (Core 2 Duo)<br>ASUS Mother Board<br>2GB DDR-2<br>320GB Hard Disk<br>ATX Casing<br>Key Board<br>Optical Mouse<br>19"LCD<br>DVD Writer<br>UPS<br>MS-07 59000/= | 2.93 GHz Processor (Core 2 Duo)<br>ASUS Mother Board<br>2GB DDR-2<br>500GB Hard Disk<br>ATX Casing<br>Key Board<br>Optical Mouse<br>24"LCD<br>DVD Writer<br>UPS<br>MS-08 94000/= |

MARSHA SYSTEMS (PVT) LTD
#74, Kannathiddy Road, Jaffna
T.P- 0212229418,0212222100

Teknel Computer&Technolog
Kodikamam Road,Nelliady
T.P- 0213210384

(C-3515)



கேட்ட உடன்
கைகளில் பணம்



கொமர்ஷல் வங்கியின்
தங்க நகை அடகு சேவை

பவுனுக்கு ரூபா.22,000/- வரை
வட்டி வருடத்திற்கு 18% மட்டுமே
யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதிக் கிளையில்
ஒக்டோபர் 20ம் திகதியிலிருந்து.....

COMMERCIAL BANK


## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்...

அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் அளவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதாக இருந்தபோதிலும் பொதுத் தேர்தல் நடத்திய பின் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே பொருத்தமானதென்ற கருத்து ஆளும் கட்சிக் கூட்டணிக்குள் வலுப்பெற்றிருப்பதால் பொதுத் தேர்தலை முதலில் நடத்துவதென்ற முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

2010 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் இவ் வருடம் நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எனினும் அடுத்த வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டம் நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

2010 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை நவம்பர் மாதம் சமர்ப்பித்தால் அது தொடர்பான விவாதம் மற்றும் வாக்கெடுப்புக்குக் கால அவகாசம் தேவையாக இருக்கும்.

எனவே இவ் வருடம் வரவு-செலவுத் திட்டத்தைத் தவிர்த்துக் கணக்காய்வு அறிக்கையை மட்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துவிட்டு ஜனாதிபதி தனக்கு இருக்கக் கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி இவ் வருட இறுதியில் நாடாளுமன்றத்தைக் கலைத்து அடுத்த வருடத்தின் முற்பகுதியில் பொதுத் தேர்தலை நடத்துவதென்ற முடிபில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதா? அல்லது பொதுத் தேர்தலை முதலில் நடத்துவதா? என்ற நிறுத்திட்டமான முடிவு இன்னும் ஜனாதிபதி மட்டத்தில் தீர்மானிக்கப்படவில்லையென மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது. (ந-5)

## லங்கா வார ஏட்டின்...

பொலிஸ் பேச்சாளர் நிமால் மெடிவக்க நேற்றிரவு ஊடகங்களுக்கு உறுதிப்படுத்தியிருந்தார்.

இருந்த போதிலும் இக் கைதுக்கான காரணம் பொலிஸாரால் தெரிவிக்கப்படவில்லை. கொழும்பு ஹோமாகம பகுதியிலுள்ள கலவில்வத்த மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றுக் கொண்டிருந்த விளையாட்டுப் போட்டி ஒன்றில் கலந்து கொண்டிருந்த போதே அங்கு வந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் லங்கா ஆசிரியரைக் கைது செய்தனர்.

லங்கா வார ஏட்டின் பிந்திய பதிப்பில் வெளியான செய்தி ஒன்று தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டிருப்பதாக ஊடகத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியுமான ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடை யிலான முரண்பாடுகள் தீவிரமடைந்திருப்பதாக லங்கா வார ஏடு அதன் பிந்திய வெளியீட்டில் பிரதான செய்தியை வெளியிட்டிருக்கின்றது. (ந-5,14)

## சிங்கப்பூர் வெளிவிவகார...

வினரை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் வரவேற்று யாழ்.பொது நூலகத்திற்கு அழைத்து வந்தனர்.

யாழ்.மாநகர சபை முதல்வர்; ஆணையாளர் ஆகியோர் இணைந்து சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் மற்றும் குழுவினருக்கு யாழ்.பொது நூலகத்தைச் சுற்றிக் காண்பித்தனர்.

தொடர்ந்து யாழ்.பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வில் பொது நூலகத்திற்கான நூல்களை சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் கியோ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்க அவர் அதனை மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவிடம் கையளித்தார்.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் பொது நூலக அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர் கோப்பாய் நலன்புரி முகாமுக்குச் சென்று அங்குள்ள மக்களின் நிலைமைகளை நேரில் ஆராய்ந்தனர். (ந-5)

## மழைக்கு...

யாகக் குடியமர்த்துவதன் மூலம் வவுனியா நலன்புரி முகாம்களில் இட நெருக்கடி குறைவடையும். அத்துடன் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் அவர்களது வாழ்விடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டு வாழ்வாதாரத் திட்டங்களை செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துதவுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுள்ளார். (ந-5)

## இலங்கை...

பெற்றதாகத் தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்த விசாரணை அறிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் எதிர்வரும் வாரத்தில் வெளியிடவுள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அடிப்படை நிபந்தனைகளை இலங்கை பூர்த்தி செய்யவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டம் மறுக்கப்பட்டால் அதனைப் பொருளாதாரத் தடையாகக் கருத முடியாது எனவும் உரிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் சகல நாடுகளும் இந்தச் சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அடக்கு முறைகள், சித்திரவதைகள், தொழில் சட்டங்கள் மீறப்பட்டமை போன்ற பல்வேறு குற்றச்செயல்கள் இடம் பெற்றுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தை இழக்க நேரிட்டால் பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவு ஏற்படக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டம் குறித்த தீர்மானத்தை நடை முறைப்படுத்த மேலும் ஆறு மாத கால அவகாசம் தேவைப்படும். (ந-5)

## பொதுக்...

இறுதித் தீர்மானம் இன்னமும் எடுக்கப்படவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ந-5)


உடன் தேவை

கொம்பியூட்டர் ரைப்பிங் (தமிழ், ஆங்கிலம்) நன்கு தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.(முன் அனுபவம் விரும்பத்தக்கது) (அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

எமது மேலதிக சேவைகள்:-
1) Photo copy.
2) Internet Browsing.
3) Binding.
4) Computer type setting.
5) Colour print.
6) School Instruments.

தொடர்புகளுக்கு:-
நியூ கோல்டன் ஸ்டார்
226, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
(யாழ்.பல்கலைக்கழக அருகாமை)
T.P:-021 222 6951
077 9522444
(3798)



CISCO
யாழ் நகரில் முதல் முறையாக
கற்கை நெறிகளின் முதல் இரு அணிகளின் பயிற்சி நிறைவும்
விசேட கலந்துரையாடலும்
18th October மாலை 04 மணி
MCS விரிவுரை மண்டபத்தில்
அனைவரும் வருக!
Phone: 0772-395 895
324, பலாலி வீதி,
பரமேஸ்வராசந்தி அருகில்,
யாழ்ப்பாணம், Bus Route - 764
MCS Jaffna + WinSys Colombo
CCNA CISCO CERTIFIED



பாடசாலை மாணவர்கள் (Grade 10, G.C.E O/L, G.C.E A/L)
உயர்கற்கை நெறி மாணவர்கள், உத்தியோகத்தர்கள்,
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆர்வலர்கள்
அனைவருக்குமான கட்டுரைகள், வினாத்தாள்கள் – விடைகள்
மற்றும் பல்வேறு தகவல் தொழில்நுட்ப விடையங்களுடன்
ஓர் முழுமையான புதுமைப் படைப்பு

அதிரடி விற்பனையில்

இலங்கையின் முதற்தர
சமகால தகவல் தொழில்நுட்பம்

விலை : ரூபா 350.00 மட்டுமே

யாழ்ப்பாணம் | வவுனியா | கொழும்பு

யாழ் நகரில் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.